# போக்குவரத்துத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2015–2016

## மானியக் கோரிக்கை எண். 48


பி. **தங்கமணி**

தொழில் மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2015

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | போக்குவரத்துத் துறையின் நிர்வாக அமைப்பு மற்றும் செயல்பாடுகள் | 3 |
| 3 | அரசு போக்குவரத்துக் கழகங்களின் அடிப்படை உட்கட்டமைப்புகள் | 6 |
| 4 | அரசு போக்குவரத்துக் கழகங்களின் வருவாய் | 10 |
| 5 | போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு வழங்கிய நிதியுதவி விவரங்கள் | 11 |
| 6 | சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் | 13 |
| 7 | பொதுமக்கள் சேவையை மேம்படுத்த நடவடிக்கைகள் | 17 |
| 8 | பயணக் கட்டண சலுகை | 22 |
| 9 | வருவாய் மேம்பாட்டு நடவடிக்கைகள் | 30 |
| 10 | அம்மா குடிநீர் திட்டம் | 33 |
| 11 | புதிய பணிமனைகள் அமைத்தல் | 34 |
| 12 | பணியாளர்களின் சமூக சிந்தனை | 35 |

| | | |
|---|---|---|
| 13 | பணியாளர்களின் நலன் காத்தல் | 36 |
| 14 | பணியாளர்களின் செயல்திறன் மேம்படுத்த நடவடிக்கைகள் | 45 |
| 15 | அரசு போக்குவரத்துக் கழகங்கள் | 47 |
| 16 | தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் | 82 |
| 17 | பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு | 84 |
| 18 | சாலைப் போக்குவரத்து நிறுவனம் | 87 |
| 19 | மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறை | 94 |
| 20 | சென்னை ஒருங்கிணைந்த பெருநகர் போக்குவரத்து ஆணையம் (CUMTA) | 95 |
| 21 | மோனோ இரயில் திட்டம் | 96 |
| 22 | துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு | 98 |
| 23 | விமான நிலையங்களை நவீனமயமாக்குதல் மற்றும் விரிவாக்கம் செய்தல் | 98 |
| 24 | முடிவுரை | 99 |

## மானியக் கோரிக்கை எண். 48

## போக்குவரத்துத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2015–2016

### 1. முன்னுரை:

பொருளாதார செயல்பாட்டிற்கு மிகவும் அடிப்படையான, முக்கிய அம்சமானது ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு பயணம் செய்தல் ஆகும். இதன் மூலம் ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு செல்வதற்கான அடிப்படை தேவை, பயணிப்போர், சரக்குகள் மற்றும் தகவல் பரிமாற்றம் ஆகிய தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. இடம்பெயர்வதற்கான போதிய போக்குவரத்து வசதி இல்லாதவர்களைவிட, இவ்வாய்ப்பு பெற்றோருக்கே, பொருளாதார மேம்பாடு எய்திட அதிக வாய்ப்பு கிடைக்கிறது. அதிக அளவு இடம்பெயர்தல் வளர்ச்சிக்கு தூண்டுகோலாக இருக்கும். எனவே இடம்பெயர்தல் வளர்ச்சிக்கு நம்பத்தக்க அறிகுறியாகும்.

பல தேசங்களின் பொருளாதார மற்றும் சமூக நிலவியல் மாற்றத்திற்கு போக்குவரத்து தூண்டுகோலாக

அமைகிறது. போக்குவரத்துத்துறை பொதுமக்களின் நலனுக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கிறது. போக்குவரத்து செயல்பாடுகள் திறம்பட செயல்படுமேயானால் அது பொருளாதாரம் மற்றும் சமூக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும். அதிகரிக்கும் போக்குவரத்து செயல்திறன், உற்பத்தி ஆதாயத்தினை வேறு பல வழிகளில் வழங்கக்கூடிய கருவியாக திகழ்கிறது.

போக்குவரத்தின் இறுதியான இலட்சியம், எளிதில் அணுக இயலும் தன்மை ஆகும். சேவை மற்றும் மூலப்பொருட்கள், தொழிலாளர், வேலை இடம், தொழில்நுட்பப்பணி, வணிகக்கூட்டம், வாடிக்கையாளர் மற்றும் பகிர்ந்தளிப்போர் (Distributors) ஆகியோரின் நலன்களுக்கு உட்பட்டு மக்கள் மற்றும் தொழிற்சாலைகள் விரும்பக்கூடிய வள ஆதாரங்களை எளிதில் அடையக்கூடியதாகும்.

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் "**தொலைநோக்குத் திட்டம் 2023**"-ன், தமிழகத்தை இந்தியாவிலேயே வளமான, வளர்ச்சிமிக்க, வறுமையில்லாத செழிப்பான மாநிலமாக மாற்றவும், மக்கள் அனைவரும் நவீன சமூகத்திற்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும்

பெற்று சுற்றுச்சூழல் மற்றும் உலகின் பிற பகுதிகளுடன் இசைவிணக்கமான (Harmonious) ஈடுபாட்டுடன் காணப்படவேண்டும் என்பது இலக்கு ஆகும்.

இம்மாநில மக்களின் தேவைக்கேற்ப (Affordability), எளிதில் அணுகக்கூடிய வகையில், நகரங்கள், புறநகரங்கள், மலைப்பகுதிகள் மற்றும் மாநிலங்களுக்கு இடையில் போக்குவரத்து சேவைகளை அரசு போக்குவரத்துக் கழகங்கள் வழங்கி வருகின்றன.

## 2. போக்குவரத்துத்துறையின் நிர்வாக அமைப்பு மற்றும் செயல்பாடுகள்:

போக்குவரத்துத்துறையானது அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தலைமையின் கீழ் 2 துணைச் செயலாளர்கள், 4 சார்புச் செயலாளர்கள், 59 நிர்வாக ஊழியர்கள் மற்றும் போக்குவரத்துக் கழகங்களின் தலைவர் அலுவலகத்தில் பணியாற்றும் 11 ஊழியர்களை உள்ளடக்கியது. அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் அலுவல் வழித் தலைவராகவும், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராகவும், போக்குவரத்துத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் செயல்படுகிறார்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ், பின்வரும் துறைகள் / அமைப்புகள் செயல்படுகின்றன.

(i) எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்கள்.
(ii) தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்.
(iii) சாலைப் போக்குவரத்து நிறுவனம்.
(iv) பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு.
(v) தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறை.

மேலும், தமிழகத்தில் செயல்பட்டு வரும் கீழ்க்கண்ட எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்கள் உள் மற்றும் வெளி மாநில சேவைகளை மேற்கொண்டு வருகின்றன.

(i) மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட், சென்னை.

(ii) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், சென்னை.

(iii) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம்.

(iv) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம்.

(v) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர்.

(vi) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம்.

(vii) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை.

(viii) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், திருநெல்வேலி.

**அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்கள் பற்றிய கண்ணோட்டம் :**

தமிழ்நாட்டின் எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்கள் **1,790** உபரி பேருந்துகள் உட்பட, **22,474** பேருந்துகளைக் கொண்டு இயங்கி வருகின்றன.

மார்ச் **2015** வரை இயக்கப் பேருந்துகளின் எண்ணிக்கை **20,684** ஆகும். மேலும், கர்நாடகா, ஆந்திரா, கேரளா ஆகிய மாநிலங்களுக்கும் மத்திய ஆட்சிப் பகுதியான புதுச்சேரிக்கும் அரசு போக்குவரத்துக் கழகங்கள் தங்களுடைய புவியியல் இயக்க எல்லையினை விரிவுபடுத்தியுள்ளன. அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களும், நாளொன்றுக்கு சராசரியாக **90.21** இலட்சம் கிலோ மீட்டர் தூரத்திற்கு பேருந்துகளை இயக்குகின்றன. மேலும், **31.03.2015** அன்று வரை அனைத்து போக்குவரத்துக்

கழகங்களிலும் பணியாற்றும் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை **1,44,818** ஆகும்.

அரசு போக்குவரத்துக் கழகங்களின் திறனை மேம்படுத்த, இவ்வரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டதன் பயனாக, வளர்ச்சிக் குறியீடுகள் சாதகமான விளைவை ஏற்படுத்தியுள்ளன. அரசு போக்குவரத்துக் கழகங்களால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பயனாக, மார்ச் **2011**–ல், **1** லிட்டருக்கு **5.25** கி.மீட்டராக இருந்த இயக்கத்திறன் மார்ச் **2015**–ல், **5.30** கி.மீட்டராக உயர்ந்துள்ளது.

## 3. அரசு போக்குவரத்துக் கழகங்களின் அடிப்படை உட்கட்டமைப்புகள்:

- **294** கிளைகள் (கிராமம் மற்றும் நகரப் பகுதிகள்)
- **21** இயந்திர மறுசீரமைப்பு மற்றும் தொழிற்கூடங்கள்
- **23** பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள்
- **18** உருளிப்பட்டை (Tyre) புதுப்பிக்கும் தொழிற்கூடங்கள்
- **42** பேருந்து தரச்சான்று அளிக்கும் பிரிவுகள்

ஆகிய அடிப்படை உட்கட்டமைப்புகளுடன் அரசு போக்குவரத்துக் கழகங்கள் (31.03.2015 வரை) இயங்கி வருகின்றன.

**3.1 பேருந்து கட்டணம்:**

தமிழ்நாட்டில் பேருந்து கட்டணங்கள் கடந்த 18.11.2011 அன்று திருத்தியமைக்கப்பட்டன. ஜனவரி 2013–ல் கொண்டுவரப்பட்ட மைய அரசின் இரட்டை விலைக் கொள்கையினாலும், செப்டம்பர் 2012 முதல் ஆகஸ்ட் 2014 வரை டீசல் விலை அதிகரித்ததாலும் ஏற்பட்ட கூடுதல் நிதிச்சுமையை, பயணிகளின் மீது சுமத்தாமல் தமிழக அரசே ஏற்றுக் கொண்டுள்ளது. இதன் பின்னரும், நாட்டிலேயே மிகக்குறைந்த பேருந்து கட்டணம் வசூலிக்கும் மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது. 31.03.2015–ன்படி பிற மாநிலங்களின் பேருந்து கட்டண விகிதத்துடன் தமிழ்நாட்டின் பேருந்து கட்டண ஒப்பீடு பின்வருமாறு :

(ஒரு கி.மீ. கட்டணம் பைசாவில்)

| மாநிலம் | கட்டண விகிதம் அமலுக்கு வந்த தேதி | புறநகர் (சாதா–ரணம்) | விரைவு / சொகுசு | அதி சொகுசு | அதி நவீன சொகுசு | குளிர் சாதனம் | வால்வோ குளிர் சாதனம் |
|---|---|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு | 18.11.2011 | 42 | 56 | 60 | 70 | 90 | 110 |
| ஆந்திரா | 06.11.2013 | 59 | 79 | 89 | 105 | 132 | 155 |
| கேரளா | 20.05.2014 | 64 | 68 | 77 | 110 | 110 | 130 |
| கர்நாடகம் | 10.01.2015 | 58.70 | 89.75 | 111.50 | 131 | 177 | 190 |
| மஹாராஷ்டிரா | 27.09.2012 | 90 | - | 120 | - | 160 | - |
| குஜராத் | 04.03.2013 | 58.41 | 60.18 | 67.91 | - | 100 | - |

## 3.2 போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து சேவைகள்:

**31.03.2015** வரையில் அரசு போக்குவரத்துக் கழகங்கள் பயணிகளுக்காக இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| சென்னை மாநகர் – நகரப் பேருந்துகள் | 3,531 |
| நகரப் பேருந்துகள் (மாவட்டங்களில்) | 6,952 |
| புறநகர்ப் பேருந்துகள் (மலைப்பகுதி பேருந்துகள் உட்பட) | 9,164 |
| விரைவுப் பேருந்துகள் | |
| மாநிலத்திற்குள் | 656 |
| வெளிமாநிலங்களுக்கு | 381 |
| மொத்த இயக்கப் பேருந்துகளின் எண்ணிக்கை | 20,684 |
| உபரிப் பேருந்துகள் | 1,790 |
| மொத்த பேருந்துகள் | 22,474 |

## 3.3 இயக்க சாதனையில் முன்னேற்றம் :

2010–11, 2011–12, 2012–13, 2013–14 மற்றும் 2014–15–ஆம் (மார்ச் 2015 வரை) ஆண்டுகளுக்கான இயக்க செயல்திறன் விவரங்கள் பின்வருமாறு :

| பொருள் | 2010–11 | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 |
|---|---|---|---|---|---|
| பேருந்துகளின் எண்ணிக்கை | 21,154 | 21,207 | 22,053 | 22,501 | 22,474 |
| இயக்கப்படும் பேருந்துகள் | 19,110 | 19,507 | 20,500 | 20,684 | 20,684 |
| ஒரு நாளைக்கு இயக்கப்படும் மொத்த தூரம் (இலட்சம் கி.மீ) | 87.59 | 88.44 | 89.78 | 91.20 | 90.21 |
| பழுதுபடுதல் (10,000 கிலோ மீட்டருக்கு) | 0.01 | 0.01 | 0.01 | 0.01 | 0.004 |
| விபத்துகள் (1,00,000 கிலோ மீட்டருக்கு) | 0.25 | 0.22 | 0.20 | 0.20 | 0.18 |
| உயிரிழப்பு விபத்துகள் | 1472 | 1237 | 1233 | 1187 | 1165 |
| இறந்தவர்கள் எண்ணிக்கை | 1656 | 1397 | 1382 | 1318 | 1331 |
| எரிபொருள் செயல் திறன் (கி.மீ/லிட்டருக்கு) சராசரியாக | 5.25 | 5.25 | 5.27 | 5.26 | 5.30 |
| கழிவு செய்யப்பட்ட உருளிப்பட்டை ஓடிய தூரம் (இலட்சம் கிலோ மீட்டர்) | 1.64 | 1.65 | 1.80 | 1.82 | 1.92 |
| இயக்க வேண்டிய ஒரு பேருந்துக்கு பணியாளர்கள் விகிதம் (தொழிற்கூட பணியாளர்கள் உட்பட) | 6.69 | 6.40 | 6.31 | 6.43 | 6.48 |

## 3.4 போக்குவரத்துக் கழக இயக்கச் செலவு வகைகள்:

சம்பளம் மற்றும் டீசல் விலை உயர்வினால் போக்குவரத்துக் கழகங்களின் இயக்கச் செலவுகள்

அதிகரிக்கின்றன. **2014–15–**ஆம் ஆண்டிற்கான (மார்ச் **2015** வரை) பல்வேறு செலவினங்களின் விவரம் சதவீதத்தில் கீழ்வருமாறு:-

| **வ. எண்** | **இயக்கச் செலவு வகைகள்** | **சதவீதத்தில்** |
|---|---|---|
| 1 | சம்பளம் | **49.4%** |
| 2 | டீசல் | **33.5%** |
| 3 | பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு | **4.1%** |
| 4 | தேய்மானம் | **2.7%** |
| 5 | மோட்டார் வாகன விபத்து இழப்பீடு மற்றும் பிற இனங்கள் | **3.7%** |
| 6 | வட்டி | **4.7%** |
| 7 | வரிகள் | **1.9%** |
| | **மொத்தம்** | **100%** |

## 4. அரசு போக்குவரத்துக் கழகங்களின் வருவாய் :

மத்திய அரசு தொடர்ந்து டீசல் விலையை உயர்த்தி வருவதாலும், டீசல் விற்பனையில் இரட்டை விலைக் கொள்கையாலும், உதிரி பாகங்களின் விலை உயர்வாலும் மற்றும் தொழிலாளர்களுக்கான அகவிலைப்படி உயர்வு வழங்குவதாலும் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் கூடுதல் செலவு ஏற்படுகின்றது. அரசு போக்குவரத்துக் கழகங்கள் முந்தைய ஆண்டுகளைக் காட்டிலும் தொடர்ந்து வருவாயில் வளர்ச்சி அடைந்துள்ளன.

அரசு பேருந்துகளின் வருவாய் வசூல், விளம்பரங்கள், குடிநீர் விற்பனை, விரைவுத் தூதஞ்சல் சேவை, வாடகைக் கட்டணங்கள் மற்றும் வணிக வளாகங்கள் போன்ற இனங்கள் வாயிலாக ஈட்டும் விவரங்கள் பின்வருமாறு :

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | நாளொன்றுக்கு பேருந்து கட்டண வசூல் | இதர வருவாய் | மொத்த வருவாய் |
|---|---|---|---|
| **2011–12** | **18.75** | **2.64** | **21.39** |
| **2012–13** | **19.87** | **3.01** | **22.88** |
| **2013–14** | **20.12** | **4.59** | **24.71** |
| **2014–15** (துணிக்கைக்கு முன்) | **20.50** | **4.40** | **24.90** |

## **5. போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு வழங்கிய நிதியுதவி விவரங்கள்:**

அரசு கடந்த **4** ஆண்டுகளில், **(2011–2015)** அரசின் மானியங்கள், செலவினத்தை ஈடு செய்தல், கடன் மற்றும் வழிவகை முன்பணம் ஆகிய வகைகளில் ரூ.**4,818.54** கோடியினை அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும் வழங்கியுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு:

## பங்கு மூலதன உதவி

(ரூபாய் கோடியில்)

| வருடம் | புதிய பேருந்துகள் | பயணச் சீட்டு எந்திரங்கள் | புத்தக கணக்குகளில் நிலுவைத் தொகையை குறைக்கும் பொருட்டு (டீசலுக்காக) | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2011-12 | 155.26 | 7.0275 | - | 162.2875 |
| 2012-13 | 150.00 | 24.6322 | - | 174.6322 |
| 2013-14 | - | - | 350.00 | 350.0000 |
| 2014-15 | 125.00 | - | 228.00 | 353.0000 |
| மொத்தம் | 430.26 | 31.6597 | 578.00 | 1039.9197 |

## கடன்கள் மற்றும் வழிவகை முன்பணங்கள்

(ரூபாய் கோடியில்)

| வருடம் | புதிய பேருந்துகள் | பேருந்துகளை புதுப்பித்தல் | மோட்டார் வாகன விபத்து வழக்கு தொகை | டீசல் | ஊதிய ஒப்பந்தம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2011-12 | 137.5000 | 24.395 | 25.00 | 81.0265 | 178.1415 | 446.0630 |
| 2012-13 | _ | | 13.91 | _ | _ | 13.9100 |
| 2013-14 | _ | 24.395 | _ | _ | _ | 24.3950 |
| 2014-15 | 81.6144 | _ | 39.73 | | | 121.3444 |
| மொத்தம் | 219.1144 | 48.790 | 78.64 | 81.0265 | 178.1415 | 605.7124 |

## உதவித் தொகை

(ரூபாய் கோடியில்)

| வருடம் | மோட்டார் வாகன விபத்து வழக்கு தொகை | டீசல் | விபத்தின்றி பணிப்புரிந்த ஓட்டுநர்களுக்கு முதலமைச்சர் விருது | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2011-12 | 20.00 | _ | 2.7800 | 22.7800 |
| 2012-13 | 20.00 | 200.00 | 2.7800 | 222.7800 |
| 2013-14 | 20.00 | 500.00 | 1.6004 | 521.6004 |
| 2014-15 | 20.00 | 600.00 | 2.7800 | 622.7800 |
| மொத்தம் | 80.00 | 1300.00 | 9.9404 | 1389.9404 |

**2011–2012** முதல் **2014–15** வரையில் அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும் (அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தவிர) ரூ.**1,782.97** கோடி செலவில் மாணவர்களுக்கு பயணக் கட்டண சலுகை அரசால் வழங்கப்பட்டுள்ளன.

**6. சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் :**

**6.1 விபத்துக்களை குறைக்க விரைவான நடவடிக்கைகள்:**

தமிழ்நாட்டில் அதிவிரைவான நகர வளர்ச்சியினால் வாகனங்களின் எண்ணிக்கை பெருமளவில் உயர்ந்துள்ளது. அரசு போக்குவரத்துக் கழகங்கள் **2011–12** மற்றும் **2012–13–**ஆம் ஆண்டுகளில் மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுத் தொகையாக, முறையே **7,360** வழக்குகளுக்கு ரூ.**100.73** கோடியும், **6,640** வழக்குகளுக்கு ரூ.**116.67** கோடியும், **2013–14–**ஆம் ஆண்டில் **5,532** வழக்குகளுக்கு ரூ.**92.91** கோடியும் மற்றும் **2014–2015 (2015** மார்ச் வரை**)** ஆம் ஆண்டில் **5,797** வழக்குகளுக்கு ரூ.**116.82** கோடியும் வழங்கியுள்ளன.

சாலை விபத்துகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு அரசு போக்குவரத்துக் கழகங்கள் கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன :–

(i) ஓட்டுநர்கள் / நடத்துநர்கள் பணியின்போது கைபேசி உபயோகித்தல் மற்றும் மது அருந்துதல் ஆகியவை முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளன.

(ii) பறக்கும்படை உதவியுடன் சுவாசப் பரிசோதனைக் கருவியைக் கொண்டு, பணியில் மது அருந்தியிருப்பவர்களைக் கண்டறிய திடீர் சோதனையும் நடத்தப்படுகிறது.

(iii) ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் நன்கு ஓய்வு எடுக்கும் வகையில், ஓய்வு அறைகளின் தரம் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

(iv) மாநில நெடுஞ்சாலை மற்றும் காவல்துறை உதவியுடன் சாலை வசதியை மேம்படுத்துதல், போக்குவரத்து தொடர்பான எச்சரிக்கைக் குறியீடு அறிவிப்புப் பலகைகளை விபத்து ஏற்படும் பகுதிகளில் நிறுவுதல் ஆகியவற்றின் மூலம் விபத்து ஏற்படுவதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(v) அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களை ஊக்குவிக்கும் பொருட்டு விபத்தின்றி பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் பெயரால் விருதுகள் வழங்கப்படுகின்றன. இவ்விருதுக்காக, கடந்த 4 ஆண்டுகளில் ரூ.9.94 கோடி அரசால் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது:

| வருடம் | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|
| 2011-12 | 2.78 |
| 2012-13 | 2.78 |
| 2013-14 | 1.60 |
| 2014-15 | 2.78 |
| மொத்தம் | 9.94 |

(vi) தொடர் விபத்துகள் மூலம் உயிரிழப்பு ஏற்படக் காரணமாக இருக்கும் ஓட்டுநர்களை பணிநீக்கம் செய்வது என்ற ஒரே மாதிரியான நிலைப்பாட்டினை அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களும் கொண்டுள்ளன.

(vii) ஓட்டுநர்களின் மன அழுத்தத்தை குறைக்கும் வகையில் யோகா மற்றும் தியான முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்வரசால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு விபத்துத் தடுப்பு நடவடிக்கைகளின் பயனாக, விபத்துகளின் எண்ணிக்கை கடந்த **5** ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவில் பின்வருமாறு குறைந்துள்ளது:-

| ஆண்டு | இயக்க பேருந்துகளின் எண்ணிக்கை | உயிரிழப்பு விபத்துகளின் எண்ணிக்கை | உயிரிழப்பு எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2010-11 | 19,110 | 1,472 | 1,656 |
| 2011-12 | 19,507 | 1,237 | 1,397 |
| 2012-13 | 20,500 | 1,233 | 1,382 |
| 2013-14 | 20,684 | 1,187 | 1,318 |
| 2014-15 | 20,684 | 1,165 | 1,331 |

## 6.2 விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம்

அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளால் ஏற்படும் விபத்தில் காயமடைந்தவர்களுக்கும் மற்றும் உயிர் இழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கும் நீதிமன்றத்தை நாடாமல் விரைவாக விபத்து இழப்பீட்டுத் தொகை வழங்கும் பொருட்டு, **2010–11, 2011–12, 2012–13, 2013–14** மற்றும் **2014–15** என ஆண்டுதோறும் அரசின் பங்காக ரூ.**20** கோடியும், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் பங்காக ரூ.**20** கோடியும், ஆகமொத்தம் ரூ.**40** கோடியில் “**விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம்**” என்ற ஒரு தனி தொகுப்பு நிதி உருவாக்கப்பட்டு தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தால் கையாளப்படுகிறது.

## 6.3 மக்கள் நீதிமன்றம்:

அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களும் **1987–** ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மக்கள் நீதிமன்றத்தின் மூலம் தீர்வு செய்யப்பட்ட விபத்து இழப்பீட்டு வழக்குகளுக்கு தொகுப்பு நிதியிலிருந்து இழப்பீடு வழங்கி வருகிறது. அதன்படி, கடந்த நான்கு ஆண்டுகளில் அரசு போக்குவரத்துக் கழகங்களினால் தீர்வு செய்யப்பட்ட வழக்குகளுக்கு வழங்கப்பட்ட தொகையின் விவரம் பின்வருமாறு:-

| ஆண்டு | வழக்குகளின் எண்ணிக்கை | மக்கள் நீதிமன்றம் மூலமாகத் தீர்வு செய்யப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---:|---:|
| 2011–12 | 884 | 997.21 |
| 2012–13 | 1,867 | 3,466.29 |
| 2013–14 | 1,160 | 569.22 |
| 2014–15 | 897 | 1,028.14 |

## 7. பொதுமக்கள் சேவையை மேம்படுத்த நடவடிக்கைகள்:

## 7.1 அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் இயக்கப் பேருந்துகள்:

இவ்வரசின் சீரிய நடவடிக்கையால், அரசு போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பேருந்துகளின்

எண்ணிக்கை மார்ச் **2011–**ஆம் ஆண்டில் **19,110–**லிருந்து மார்ச் **2015–**ஆம் ஆண்டில் **20,684** ஆக உயர்த்தப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றது.

### 7.2 புதிய வழித்தடங்கள் தொடக்கம்:

பொதுமக்களின் போக்குவரத்து வசதியினை மேம்படுத்த, இவ்வரசால் கடந்த நான்கு ஆண்டுகளில் சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் சிற்றுந்துகள் உட்பட தமிழகம் முழுவதும் **1,476** புதிய வழித்தடங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

### 7.3 புதிய பேருந்துகள் அறிமுகம் :

அரசு போக்குவரத்துக் கழகங்களில் உள்ள வயது முதிர்ந்த பேருந்துகளைக் கழிவுசெய்து, **2011–12, 2012–13** மற்றும் **2014–15** வரை **7,153** புதிய பேருந்துகள் வாங்க அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு :

| ஆண்டு | பேருந்துகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2011-12 | 3000 |
| 2012-13 | 2953 |
| 2014-15 | 1200 |
| மொத்தம் | **7153** |

## 7.4 சென்னையில் 100 சிற்றுந்துகள் அறிமுகம்:

பயணம் செய்யும் பொதுமக்களின் தேவையை நிறைவு செய்யும் நோக்கத்தில், சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள குறுகிய சாலைகளை முதன்மைச் சாலைகளுடன் இணைப்பதற்கு வசதியாக 40 வழித்தடங்களில் 100 சிற்றுந்துகள் மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் அறிமுகம் செய்யப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகள் மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளன. மேலும், சென்னை மாநகருக்கு, 2014–2015–ஆம் ஆண்டில் கூடுதலாக 100 சிற்றுந்துகள் மாநகர் போக்குவரத்து கழகத்தால் வாங்கப்படும் என **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்கள்.

## 7.5 மகளிர் சிறப்பு பேருந்துகள்:

சென்னையில் நெரிசல் நேரங்களில் மகளிர் மற்றும் சிறுவர்கள் சிரமமின்றி பயணம் செய்ய, மாநகர் போக்குவரத்துக் கழகம் 73 வழித்தடங்களில் 200 மகளிர் மற்றும் சிறுவர்கள் சிறப்பு பேருந்துகளை இயக்கி வருகிறது.

## 7.6 மாற்றுத்திறனாளிகளுக்கான பேருந்துகள்:

மாற்றுத்திறனாளிகளின் வசதிக்காக முதன் முறையாக மாநகர போக்குவரத்துக் கழகத்தால் 10 நட்பு பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

## 7.7 மலைப்பகுதிகளில் சிற்றுந்துகள்:

மலைப்பகுதிகளில் குறுகலான பாதைகளினால் போக்குவரத்து வசதியின்றி வசிக்கும் மக்கள், அருகில் உள்ள நகரங்களுக்கு சென்று வருவதற்கும், மாணவ / மாணவியர் பள்ளி செல்வதற்கும், தொழிலாளர்கள் அருகில் உள்ள நகரங்களுக்கு வேலைக்கு செல்வதற்கும், நோயாளிகள் அருகில் உள்ள மருத்துவமனைக்கு உடனடியாக செல்லவும், இவ்வரசு போக்குவரத்துக் கழகங்களின் சுய நிதியிலிருந்து ரூ.35 கோடி செலவில் மலைப்பகுதிகளில் 208 சிற்றுந்துகளை இயக்க ஆணையிட்டுள்ளது. இதுவரையில் 62 சிற்றுந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. (7 சிற்றுந்துகள் 26.06.2014 அன்றும் மற்றும் 55 சிற்றுந்துகள் 18.06.2015லும் அறிமுகப்படுத்தப்பட்டன) இவற்றுள் உதகமண்டலத்தில் 62

சிற்றுந்துகள் இயக்குவதற்கு மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து ரூ.10 கோடி ஒதுக்கி ஆணையிடப்பட்டுள்ளது.

### 7.8 உணவகத்துடன் கூடிய பேருந்து:

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் சென்னை மற்றும் ஸ்ரீரங்கம் இடையில் உணவகம் மற்றும் கழிவறையுடன் கூடிய இரண்டு பேருந்துகள் **20.06.2013** முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

### 7.9 விழாக்கால சிறப்பு பேருந்துகள்:

தீபாவளி மற்றும் பொங்கல் விழாக்காலங்களின் போது, பொதுமக்கள் மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலிருந்து தங்கள் சொந்த ஊர்களுக்கு சென்று பணிபுரியும் இடத்திற்கு திரும்பி வருவதற்கு வசதியாக சாதாரண கட்டணத்துடன் போதுமான பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த விழாக்காலங்களில் இயக்கப்படும் பேருந்துகளின் மூலம் அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களும் குறிப்பிடத்தக்க வருவாய்

ஈட்டியுள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளில் இயக்கப்பட்ட பேருந்துகள் மற்றும் வருவாய் விபரம் வருமாறு:

| ஆண்டு | பண்டிகை | இயக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை | வருவாய் (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 2011-12 | பொங்கல் | 6,061 | 80.00 |
| 2012-13 | தீபாவளி<br>பொங்கல் | 7,958<br>7,135 | 87.37<br>89.70 |
| 2013-14 | தீபாவளி<br>பொங்கல் | 10,484<br>9,546 | 86.93<br>93.41 |
| 2014-15 | தீபாவளி<br>பொங்கல் | 10,499<br>8,548 | 83.96<br>81.86 |

## 8. பயணக் கட்டண சலுகை:

### 8.1 பயணக் கட்டண சலுகை பெறும் பயனாளிகளின் வகைகள்:

- இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் மேலவை உறுப்பினர்கள்.
- அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கை நிருபர்கள் / ஊடக நபர்கள்
- மத்திய / மாநில ஒய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்தம் விதவைகள் மற்றும் வாரிசுதாரர்கள், தமிழறிஞர்கள், மொழிப்போர் தியாகிகள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்கள்.

- புற்று நோயாளிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் (காதுகேளாதோர், வாய்பேசாதோர், பார்வையற்றோர், மனவளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் வலிப்பு நோயாளிகள்)
- நாடகக் கலைஞர்கள்
- எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோயாளிகள்

**8.2 மாணவ / மாணவியருக்கான சிறப்பு சலுகைகள்:**

**"உலகத்தையே மாற்றக்கூடிய அதிக சக்திவாய்ந்த ஆயுதமாக பயன்படக்கூடியது கல்வி"** என்ற வாக்கியத்தை மனதில் வைத்துக்கொண்டு, அரசு மாணவ, மாணவியருக்கு கட்டணமில்லா பயண சலுகையை வழங்கி வருகிறது.

**(1) மாணவ / மாணவியருக்கான கட்டணமில்லா பயண சலுகை.**

(i) அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகளில் 1–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை

(ii) தேசிய குழந்தை–தொழிலாளர் திட்ட நலப்பள்ளி

(iii) அரசு தொழில்நுட்ப பயிலகங்கள்

(iv) அரசு தொழில் பயிற்சிக்கூடங்கள்

(v) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்

## 2013–14–ஆம் ஆண்டு முதல் நீட்டிக்கப்பட்ட சலுகைகள்

1) சமுதாய கல்லூரிகள்

2) அரசு உதவிபெறும் தனியார் தொழிற்பயிற்சி கூடங்கள்.

3) இசைக் கல்லூரிகள்

4) சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி கூடங்கள்

## (2) 50% பயணக் கட்டணச் சலுகை

| | |
|---|---|
| (i) தனியார் கல்லூரிகள்<br>(ii) தனியார் தொழில்நுட்ப பயிலகங்கள்<br>(iii) தனியார் பொறியியல் கல்லூரிகள் | அரசு அங்கீகாரம் பெற்றவை |

(iv) சென்னை, அண்ணா பல்கலைக் கழகப் பொறியியல் கலந்தாய்விற்கு வரும் மாணவ மாணவியர் மற்றும் உடன் வரும் ஒரு நபருக்கு.

(v) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப பயிலகங்களில் பயிலும் இலங்கை அகதிகள் முகாம்களைச் சார்ந்த மாணவ மாணவியருக்கு.

**(3) மாற்று அனுமதிச் சீட்டுகள்:**

சென்னை மாநகர் பேருந்துகளில் பயணம் செய்யும் கல்லூரி மாணவ, மாணவியர் தங்கள் இல்லத்திலிருந்து நூலகம் சென்று திரும்பி வர 60 மாற்று அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன.

**(4) அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கப்படும் மாணவ மாணவியருக்கான பயணச் சலுகை மானியம்:**

பள்ளிகள், கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழிற் பயிற்சி கூடங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கு பேருந்து பயணக் கட்டண சலுகை அட்டைகள் வழங்கியதால் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்ட இழப்பினை ஈடு செய்யும் வகையில் 2011–12–ஆம் ஆண்டில் ரூ.311.37 கோடியும், 2012–13–ஆம் ஆண்டில், ரூ.320 கோடியும், 2013–14 மற்றும் 2014–2015–ஆம் ஆண்டில் ரூ.448 கோடி வீதமும், அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசால் மானியம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2011–12 மற்றும் 2012–13 ஆகிய ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்ட பேருந்து கட்டண நிலுவைத் தொகையாக முறையே ரூ.41.60 கோடியும் மற்றும் ரூ.128 கோடியும், முந்தைய ஆண்டுகளின் நிலுவைத்

தொகையான ரூ.86 கோடியும் அரசால் வழங்கப்பட்டுள்ளது. 2015–16–ஆம் ஆண்டில் ரூ.32 கோடி உயர்த்தி ரூ.480 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 8.3 இணையவழி முன்பதிவு :

"உலகம் நமது கையில்" என்பதற்கிணங்க தொலைதூர பயணம் செய்யும் பயணிகளின் வசதிக்காக, இணையவழி மூலம் பயணச்சீட்டு முன்பதிவு செய்யும் முறை **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் 03.10.2011 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. மொத்த முன்பதிவில் 2013–2014–ஆம் ஆண்டில் 35 சதவீதமாக இருந்த மொத்த இணையவழி முன்பதிவு 2014–15–ஆம் ஆண்டில் 40 சதவீதமாக உயர்ந்துள்ளது. மார்ச் 2015–ல் அதிகபட்சமாக 43.72 சதவீதம் இணையவழி மூலம் முன்பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 8.4 விருப்பம் போல் பயணம் செய்ய பயணச் சீட்டுகள் :

அரசு நகரப் பேருந்துகளில் பயணம் செய்ய, பயணிகளை ஊக்குவிக்கும் வகையில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, திருநெல்வேலி, வேலூர், திருப்பூர், ஈரோடு, மற்றும் தூத்துக்குடி ஆகிய மாநகராட்சிகளில் கீழ்க்கண்ட கட்டண விகிதத்தில் **விருப்பம்**

**போல் பயணம் செய்யும்** பயணச் சீட்டுகள் சில நிபந்தனைகளுடன் நடத்துனர் மூலம் வழங்கப்படுகின்றன:

(i) ஒரு நாள் பயணச் சீட்டு : ரூ.50/–
(ii) வாராந்திரப் பயணச் சீட்டு : ரூ.300/–
(iii) மாதாந்திரப் பயணச் சீட்டு : ரூ.1000/–

### 8.5 மூன்றில் ஒரு பங்கு கட்டண சலுகை:

தினந்தோறும் பயணம் செய்யும் பயணிகளின் வசதிக்காக, மாநகர் மற்றும் நகர பகுதிகளில் பயன்பாட்டில் இருந்து வரும் மூன்றில் ஒரு பங்கு பயணக் கட்டண சலுகையானது 2013–14–ஆம் ஆண்டு முதல் புறநகர் பேருந்துகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் புறநகர் பேருந்துகளில் தினந்தோறும் பயணம் செய்யும் பயணிகளிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

### 8.6 குழுப் பயணச் சீட்டில் சலுகை:

அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் 10 அல்லது அதற்கு மேற்பட்ட பயணிகள் குழுவாக முன்பதிவு செய்யும் போது பயணக்கட்டணத்தில் 10 சதவீதம் கட்டணக் கழிவு தொகை வழங்கப்படுகிறது. இச்சலுகையின் மூலம் 7,705 குழுப் பயணச்சீட்டுகள் முன்பதிவு செய்யப்பட்டுள்ளது.

**31.03.2015** வரையில் **99,736** நபர்கள் ரூ.**29.51** இலட்சத்திற்கு சலுகை பெற்று பயனடைந்துள்ளார்கள்.

**8.7 கையடக்க பயண அட்டை :**

கையடக்க பயண அட்டை வழங்கும் திட்டம் மற்றும் அதற்கு உரிய உட்கட்டமைப்பு வசதிகளை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் வாயிலாக பயணிகள் மற்றும் நடத்துநர்களின் வசதிக்காக புதுப்பிக்கப்படக் கூடிய கையடக்க பயண அட்டை வழங்கப்படும். இத்திட்டம், பயணிகள் மற்றும் நடத்துநர்களிடம் நேரிடையாக பணம் கையாளுவதில் உள்ள சிரமங்களைத் தவிர்ப்பதுடன், 'மீதத் தொகை' வழங்கப்படவில்லை என்ற பிரச்சனையின்றி பயணத்தை இனிதாக்கும். இத்திட்டத்தின்படி பயணிகள் பயணிக்கும் பொழுது அதற்குரிய கட்டணம் பயண அட்டையில் உள்ள தொகையிலிருந்து கழித்துக் கொள்ளப்படும். இத்திட்டம் முதற்கட்டமாக சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் ரூ.**3.55** கோடி செலவில் அறிமுகப்படுத்தப்படும். மேலும், இத்திட்டத்தினை சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கும் விரிவுபடுத்த

உத்தேசிக்கப்பட்டு, புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**8.8 மின்னணு பயணச்சீட்டு வழங்கும் கருவிகள்:**

GPS தொழில்நுட்ப மின்னணு பயணச்சீட்டு இயந்திரம் பயணிகளுக்கும் நடத்துநர்களுக்கும் பெரிதும் உதவியாக உள்ளதோடு, நடத்துநர்கள் பயணச்சீட்டு வழங்குவதற்கும், கணக்கிடுவதற்கும் எளிதாக உள்ளது. மேலும், போக்குவரத்துக் கழகங்கள் தங்களின் இயக்க செயல்பாட்டுத் திறனை வளர்த்துக் கொள்ளவும், முறையான கணக்கீட்டை பற்றி அறியவும் பெரிதும் உதவுகிறது. இத்திட்டத்தின்கீழ், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களிலும் 16,127 (20.07.2015 வரை) மின்னணு பயணச்சீட்டு இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. (இதற்காக அரசு மூலம் வழங்கப்பட்ட தொகை ரூ.31.66 கோடி).

## 9. வருவாய் மேம்பாட்டு நடவடிக்கைகள்:

### 9.1 அரசு மற்றும் தனியார் பங்களிப்பு:

அரசு மற்றும் தனியார் பங்களிப்பு மூலம் வணிக வளாகங்களைக் கட்டுவதற்காக அரசு போக்குவரத்துக் கழகங்களில் பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ள 11 இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவையாவன;

(1) தியாகராயநகர் பணிமனை (2) திருவான்மியூர் பணிமனை (3) விக்ரவாண்டி (4) உளுந்தூர்பேட்டை (5) திருச்சி மத்திய பேருந்து நிலையம் (6) சேலம் பழைய பேருந்து நிலையம் (7) மதுரை பெரியார் பேருந்து நிலையம் (8) வேளாங்கண்ணி (9) கட்டபொம்மன் நகர் (10) பாளையங்கோட்டை மற்றும் (11) திருநெல்வேலியில் உள்ள வண்ணாரப்பேட்டை புறவழிச்சாலை கிளை. அரசு மற்றும் தனியார் பங்களிப்பை விரைவுபடுத்த ஏதுவாக தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 9.2 கழிவு செய்யப்பட்ட பேருந்துகளை மின்னணுத் தொழில்நுட்ப முறையில் ஏலமிடுதல்:

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள கழிவு செய்யப்பட்ட பேருந்துகளை மின்னணுத் தொழில்

நுட்பத்தைப் பயன்படுத்தி ஏலமிட, மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள் எம்.எஸ்.டி.சி–(M/s. MSTC) சேவை நிறுவனமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதன் பயனாக, கடந்த நான்காண்டுகளில் **3,039** பேருந்துகளை கழிவு செய்ததில் **(31.03.2015** வரை**)** ரூ.**4,414.66** இலட்சம் வருவாயாக போக்குவரத்துக் கழகங்களால் ஈட்டப்பட்டுள்ளன.

## 9.3 விளம்பரங்கள் மூலம் இலாப வருவாய்:

பேருந்துகளில் விளம்பரங்கள் செய்ததன் மூலமாக கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.**56.31** கோடியை வருவாயாக போக்குவரத்துக் கழகங்கள் ஈட்டியுள்ளன. விபரம் பின்வருமாறு :-

| ஆண்டு | அரசு போக்குவரத்துக் கழகங்களின் வருவாய் (ரூ. கோடியில்) |
|---|---:|
| 2011-2012 | 12.00 |
| 2012-2013 | 16.13 |
| 2013-2014 | 16.37 |
| 2014-2015 | 11.81 |
| மொத்தம் | **56.31** |

## 9.4 பயணவழி உணவகங்கள்:

பயணிகளுக்கு சிறப்பான வசதி அளிக்கும் பொருட்டு **37** இடங்களில் உள்ள பயணவழி உணவகங்களில் பேருந்துகளை நிறுத்த கூடுதல் இடவசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, நவீன சமையல் கூடம், உணவு அருந்தும் இடம், தரமான உணவு மற்றும் சுகாதாரமான கழிப்பிட வசதி போன்றவை மேம்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் அரசு போக்குவரத்துக் கழகங்கள் ரூ.**13.68** கோடி வருவாயை ஈட்டியுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு **:**

| ஆண்டு | அரசு போக்குவரத்துக் கழகங்களின் வருவாய் (ரூ. கோடியில்) |
|---|---|
| 2011-2013 | 4.67 |
| 2013-2014 | 4.28 |
| 2014-2015 | 4.73 |
| மொத்தம் | **13.68** |

## 9.5 சிப்பஞ்சல் மற்றும் விரைவுத்தூதஞ்சல் சேவை:

அரசு பேருந்துகளில் சிப்பஞ்சல் (Parcel Services) மற்றும் விரைவுத்தூதஞ்சல் (Courier Services) சேவைகள்

மூலமாக கடந்த நான்கு ஆண்டுகளில் அரசு போக்குவரத்துக் கழகங்கள் **ரூ.153.44** இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளன.

| ஆண்டு | அரசு போக்குவரத்துக் கழகங்களின் வருவாய் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 2011-2013 | 44.21 |
| 2013-2014 | 52.10 |
| 2014-2015 | 57.13 |
| **மொத்தம்** | **153.44** |

**10. சுகாதாரமான குடிநீர் வழங்குதல் – அம்மா குடிநீர் திட்டம் I :**

**“ தூய நீரே உலகத்தின் முதல் மற்றும் மிகமுக்கிய மருந்தாகும் ”**

அம்மா குடிநீர் உற்பத்தி நிலையம், பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான **15.09.2013** அன்று **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. அம்மா குடிநீர் உற்பத்தி நிலையம், சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் கும்மிடிப்பூண்டி வளாகத்தில் நிறுவப்பட்டு பொது மக்கள் மற்றும் பயணிகளுக்கு சுத்தமான குடிநீர் மிகக்குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மாநிலம் முழுவதும் **304** மையங்களில், அம்மா குடிநீர் மிகக்குறைந்த விலையில் ஒரு பாட்டில் ரூ.**10**—க்கு விற்பனை செய்யப்படுகிறது. இப்புதுமையான திட்டம் நம் மாநிலத்தில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டு நாட்டின் முன்னோடி திட்டமாக திகழ்கிறது.

**அம்மா குடிநீர் திட்டம் II**

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் **23.10.2013** அன்று கும்மிடிப்பூண்டியில் உள்ள சாலை போக்குவரத்து நிறுவன வளாகத்தில் அதிக அளவு நிலத்தடி நீரை கருத்திற்கொண்டு, மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட், சென்னை மூலம் தினசரி **3** இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட அம்மா குடிநீர் உற்பத்தி நிலையம் கூடுதலாக அமைக்கப்படும் என அறிவித்தார்கள். அதனடிப்படையில் பணிகள் தொடங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**11. புதிய பணிமனைகள் அமைத்தல் :**

பேருந்துகளின் எண்ணிக்கைக்கேற்ப பணிமனைகளின் எண்ணிக்கைகளையும் உயர்த்துமாறு **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். **31.03.2015** அன்றுள்ளவாறு, அரசு போக்குவரத்துக் கழக

பணிமனைகளின் எண்ணிக்கை 294 ஆகும். இவற்றில் புதிய இடங்களில் அமைக்கப்பட்ட 11 புதிய பணிமனைகள் மற்றும் 3 புதுப்பிக்கப்பட்ட பணிமனைகள் ஆகமொத்தம் 14 புதிய பணிமனைகள் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் 18.06.2015 அன்று தொடங்கி வைக்கப்பட்டன. அறிவிக்கப்பட்ட 74 புதிய பணிமனைகளில், 23 பணிமனைகள் ஏற்கனவே திறக்கப்பட்டுள்ளது. 21 பணிமனைகளின் கட்டுமானப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. மீதமுள்ள பணிமனைகளுக்கான பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

**12. பணியாளர்களின் சமூக சிந்தனை:**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை சார்பாக 14.02.2014 அன்று சமூக சேவையாக 53,129 பணியாளர்கள் ஒரே நாளில் இரத்த தானம் செய்துள்ளனர். இதுவே ஒரு நாளில் வழங்கப்பட்ட அதிகபட்ச இரத்த தானமாகும். இது ஒரு **கின்னஸ் சாதனையாகும்.** இரத்ததானம் செய்பவர்களின் பெயர் பட்டியல் மாநகர் போக்குவரத்துக் கழகத்தினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. 17.06.2015 அன்றுள்ளவாறு 16,969 போக்குவரத்துக் கழக

பணியாளர்கள் தாமாகவே முன்வந்து இரத்த தானம் செய்ய தங்களின் பெயரை பதிவு செய்துள்ளனர்.

**13. பணியாளர்களின் நலன் காத்தல்:–**

**13.1 காலிப் பணியிடங்களை நிரப்புதல்:**

அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் **16.05.2011** முதல் **31.03.2015** வரை காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு :-

| சேம ஓட்டுநர் | சேம நடத்துநர் | தொழில்நுட்பம் | கருணை அடிப்படையிலான பணி நியமனம் | மொத்த பணி நியமனம் |
|---|---|---|---|---|
| 13,460 | 13,138 | 3,809 | 908 | 31,315 |

**13.2 அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் பணிவரன்முறை செய்தல்:**

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, அரசு போக்குவரத்துக் கழகங்களில் கருணை அடிப்படையில் **386** தொழில்நுட்பம் அல்லாத உதவியாள் (Non-ITI Helper) பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். **2011–2012** முதல் **2014–2015** வரை

**856** பணியாளர்களுக்கு பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் **16.05.2011** முதல் **31.03.2015** வரை தினக்கூலி அடிப்படையில் பணி செய்தவர்களின் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு :-

| தினக்கூலி ஓட்டுநர் | தினக்கூலி நடத்துநர் | தொழில் நுட்பம் | மொத்த பணி வரன்முறை |
|---|---|---|---|
| **10448** | **11130** | **2508** | **24086** |

## 13.3 ஊதிய ஒப்பந்தம்:

**12**–வது ஊதிய ஒப்பந்தம் ஏப்ரல் **2015**–ல் ஒப்பந்த பேச்சுவார்த்தை முடிவுற்று **01.09.2013** முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியுள்ள பணியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு பலன்கள் அளிக்கப்பட்டுள்ளன :-

1. பணியாளர்களின் அடிப்படை ஊதியம் **5.5%** ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் ஊதிய உயர்வு குறைந்தபட்சம் ரூ.**1,350/**–லிருந்து அதிக பட்சமாக ரூ.**5,941/**– வரை உயர்ந்துள்ளது.

2. இவ்வூதிய ஒப்பந்தத்தை 1,15,186 போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு நடைமுறைப்படுத்த மொத்த செலவினமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.295 கோடி ஆகும்.

3. அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்த்தி வழங்கும் அரசாணையின் அடிப்படையில், மீண்டும் எந்தவித ஆணையுமின்றி போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கும் அகவிலைப்படி உடனடியாக வழங்கப்படுகிறது.

4. 19,437 தினக்கூலி மற்றும் சேம பணியாளர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

5. படிப்பணம் (Batta) மற்றும் மலைப்பகுதிப்படி (Hill Allowance), மீள்நிரப்பு கைப்படி (Refill Allowance) போன்றவை உயர்த்தி மாற்றியமைக்கப்பட்டதனால் ஏற்பட்ட கூடுதல் செலவினம் ரூ.17.91 கோடியாகும்.

6. முந்தைய ஒப்பந்தத்தின்படி நடைமுறையில் உள்ள 6+7+8+8+3 ஆண்டுகள் இடைவெளிக்கு ஒரு ஆய்வு பலன் என்பது 6 + 7 + 7 + 7 + 5 ஆண்டுகள் இடைவெளிக்கு ஒரு ஆய்வு பலன் என மாற்றியமைக்கப்பட்டது. இதனால் 7,217 தொழிலாளர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.1.17 கோடி பணப்பலன் வழங்கப்படும்.

7. முந்தைய ஊதிய ஒப்பந்தத்தால் கவரப்பட்டு **01.09.2010–**க்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு ஏப்ரல் **2015** முதல் ஓய்வூதியம் **15%** உயர்த்தப்பட்டுள்ளது.

8. காலிப்பணியிடங்கள் எழும் நிலையில் எவ்வித காலதாமதமின்றி பதவி உயர்வு வழங்கப்படும்.

9. ஆண் தொழிலாளர்களுக்கு அளித்து வரும் திருமண கடன் ரூ.**30,000/–** மற்றும், பெண் தொழிலாளர்களுக்கு ரூ.**40,000/–** என்பது இருபாலருக்கும் ரூ.**50,000/–** ஆக உயர்த்தி வழங்கப்படும்.

10. ஓய்வு பெற்றவர்களுக்கும் அவர்களது துணைவியருக்கும் புறநகர் பேருந்துகளிலும் இலவச பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும், இறந்த பணியாளர்களின் துணைவியருக்கும் புறநகர் பேருந்துகளில் இலவச பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

11. கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு பயிற்சி காலம் மூன்றாண்டிலிருந்து இரண்டு ஆண்டாக குறைக்கப்படும். தொகுப்பூதியம் முதல் ஆண்டில் ரூ.**1,440/–**லிருந்து ரூ.**3,000/–** ஆகவும், இரண்டாம் ஆண்டில் ரூ.**2,190/–**லிருந்து ரூ.**4,000/–** ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**12.** தொழிற்பயிற்சி உதவியாளர் அல்லாத பதவிகளில் பணியமர்த்துவதற்கு பதிலாக கல்வி தகுதிக்கு ஏற்ற பதவிகளில் அரசு விதிமுறைகளுக்குட்பட்டு காலி பணியிடங்கள் ஏற்படும்போது பயிற்சி காலம் முடித்த பின்னர் பணியமர்த்துவதற்கு வாரிசுதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**13.** **01.09.1992** முதல் **31.08.1998** வரை ஓய்வுப் பெற்ற பணியாளர்களுக்கும் அவர்கள் பெற்ற பணப்பலன் வருடங்களை கணக்கில் கொள்ளாமல் ஓய்வூதியம் விரிவுபடுத்தப்படும். இதனால் **01.09.1998**–க்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு ஒரு ஓய்வூதியமாவது கிட்டும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் பணப்பயன் மாதம் ஒன்றுக்கு ரூ.**1,000/**–கிடைக்கும்.

**14.** கல்விக் கடன் தொகை ரூ.**1,000/**–த்திலிருந்து ரூ.**5,000/**– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**15.** கல்வி உதவித் தொகை ஒரு குழந்தைக்கு ஒரு ஆண்டுக்கு ரூ.**150/**–லிருந்து ரூ.**250/**– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்தொகை இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

**16.** வருடத்திற்கு **5000** கி.மீட்டராக இருந்த இலவச குடும்ப பயணச் சலுகை **5500** கி.மீட்டராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

**13.4 முழு உடற்பரிசோதனை:**

**"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"** என்பதற்கிணங்க **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் **45** வயதிற்கு மேற்பட்ட ஓட்டுநர்களுக்கு முழு உடற்பரிசோதனைத் திட்டம் **2012–13–**ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. இத்திட்டம், **2013–14–**ஆம் ஆண்டில் அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. தற்போது, இத்திட்டத்தின்கீழ் **30.06.2015** வரை **47,352** பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**13.5 CT ஸ்கேன் இயந்திரம்:**

பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்காக வாங்கப்பட்ட புதிய CT ஸ்கேன் இயந்திரம் மூலம் **20.06.2013** முதல் **30.06.2015** வரை **5,208** நபர்கள் பயனடைந்துள்ளனர்.

## 13.6 ஓய்வூதிய பணப்பயன்கள்:

இவ்வரசு பொறுப்பேற்றபின், போக்குவரத்துக் கழக ஓய்வூதிய பணியாளர்களுக்கு ஓய்வு கால பணப்பயனாகிய, பணிக்கொடை மற்றும் விடுப்பு ஒப்படைப்பு ஊதியத்திற்கு ரூ.**431.26** கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஓய்வூதிய பணியாளர்களுக்கு சேமநல நிதியாக ரூ.**437.67** கோடி வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு :

(ரூ. கோடியில்)

| ஆண்டு | பணிக்கொடை | | விடுப்பு ஒப்படைப்பு ஊதியம் | மொத்தம் | சேமநலநிதி | |
|---|---|---|---|---|---|---|
| | பணியாளர்களின் எண்ணிக்கை | தொகை ரூ. | | | பணியாளர்களின் எண்ணிக்கை | தொகை ரூ. |
| 2011-12 | 1,609 (16.05.2011 முதல் மார்ச் 2012 வரை ) | 42.60 | 9.61 | 52.21 | 1,995 | 148.27 |
| 2012-13 | 2,292 | 82.10 | 17.17 | 99.27 | 3,229 | 61.90 |
| 2013-14 | 5,652 | 194.35 | 14.51 | 208.86 | 4,065 | 97.91 |
| 2014-15 (மார்ச் வரை) | 1,664 | 68.76 | 2.16 | 70.92 | 4,490 | 129.59 |
| மொத்தம் | 11,217 | 387.81 | 43.45 | 431.26 | 13,779 | 437.67 |

செப்டம்பர் **2010** முதல் அக்டோபர் **2013** வரையில் **14,089** ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகையாக (Commutation) ரூ.**292.94** கோடி வழங்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு

வழங்க வேண்டிய ஓய்வுகால பணப்பயன்களை வழங்க தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**13.7 நலத்திட்டங்கள் :**

தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் சீரிய நலன் கருதி, போக்குவரத்துக் கழகங்கள் கீழ்க்கண்ட நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன:-

1. பணிக்கால அடிப்படையிலான சிறப்புச் சம்பள உயர்வு / ஆய்வுப் பலன்கள்.
2. விடுப்புப் பயன்கள்
3. திருப்பான் படி ( **Steering Allowance** )
4. கல்வி உதவித்தொகை.
5. சலுகைக் கட்டண சிற்றுண்டி வசதி.
6. இலவச சீருடைகள் மற்றும் சலவைப்படி.
7. திருமணக் கடன்.
8. வழக்குக் கட்டணம் ஈடு செய்தல்.
9. இறுதிச் சடங்கு செலவுகள்.
10. மாணவர்களுக்கு பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு சென்றுவர கட்டணமில்லா பயண அனுமதிச்சீட்டு.

11. குடும்பநல நிதி.

12. விருப்ப ஓய்வூதியத் திட்டம்.

13. கொடைக்கானல், குற்றாலம் மற்றும் கன்னியாகுமரியில் விடுமுறை விடுதிகள்.

14. புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் (தமிழ்நாடு அரசு ஊழியர்கள் பயன்படுத்துவதுபோல).

15. பண்டிகை முன்பணம் **2012–13–**ஆம் ஆண்டு முதல் ரூ.**2,000–**லிருந்து ரூ.**5,000** ஆக உயர்வு.

16. ஓய்வூதியத் திட்டம் தொடர்ந்து நடைமுறையில் உள்ளது. **31.3.2015** அன்றுள்ளவாறு மொத்தம் **54,687** ஓய்வூதியதாரர்கள் உள்ளனர்.

17. ஓட்டுநர் மற்றும் நடத்துநர்கள் தங்கி ஓய்வெடுக்க, கடந்த நான்கு ஆண்டுகளில் ( **31.03.2015** வரை ) தரமான அடிப்படை வசதிகளுடன் ஓய்வறைகள் ரூ.**329.16** இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. விவரம் பின்வருமாறு:

| வருடம் | தங்கும் ஓய்வறைகளின் எண்ணிக்கை | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2011-12 | 115 | 41.65 |
| 2012-13 | 152 | 111.72 |
| 2013-14 | 163 | 120.00 |
| 2014-15 | 169 | 55.79 |
| மொத்தம் | | 329.16 |

18. கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பணிமனைகளின் கான்கிரீட் தளம், பேருந்துகளின் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்புக் கூடம் ஆகியவை ரூ.**19.53** கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

| வருடம் | பணிமனைகள் | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 2011-12 | 260 | 3.16 |
| 2012-13 | 271 | 5.97 |
| 2013-14 | 224 | 6.60 |
| 2014-15 | 249 | 3.80 |
| மொத்தம் | | 19.53 |

## 14. பணியாளர்களின் செயல்திறன் மேம்படுத்த நடவடிக்கைகள்:

### 14.1 விபத்து நிகழ்வுகளை குறைத்தல்:

சர்வதேச தரத்திற்கு இணையாக ஓட்டுநர்களின் திறனை மேம்படுத்த மற்றும் முறையான உட்கட்டமைப்பு, நவீனமுறை கற்பித்தல் மற்றும் பயிற்சி வசதிகளுடன் கூடிய சர்வதேச தரத்தில் கனரக வாகன ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தை சாலை போக்குவரத்து நிறுவனம், கும்மிடிப்பூண்டி வளாகத்தில் அமைக்க ரூ.**15** கோடி வழங்கப்பட்டு,

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் **05.07.2014** அன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

அகாடமிக் பிளாக், மாணவர் விடுதி, பணியாளர் குடியிருப்பு மற்றும் டிரைவிங் ரேஞ்ச் புதுப்பித்தல் ஆகிய கட்டுமானப் பணிகளுக்காக பொதுப்பணித்துறையிடம் **ரூ.12.13** கோடி ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை வாகன சோதனை ஓட்டம், அதன் தொடர்பான பயிற்றுவித்தல், பயிற்சி உபகரணங்கள், தளவாடங்கள் மற்றும் மரச்சாமான்கள் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்பட உள்ளது.

கட்டுமான பொறுப்பை, திருவள்ளூர் மாவட்ட பொதுப்பணித்துறையின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம் ஏற்று 75% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்பட உள்ளன.

### 14.2 புத்தாக்க பயிற்சி:

ஓட்டுநர்களின் திறனை மேம்படுத்தும் வகையில் புத்தாக்கப் பயிற்சி மையங்களில் ஓட்டுநர்களுக்கு தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படுகிறது. ஓட்டுநர்களின் மன அழுத்தத்தை குறைக்கும் வகையில் யோகா பயிற்சி மற்றும் தியானப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் மூலம் விபத்தில்லா பயணம் மற்றும் ஓட்டுநரின் உடல் ஆரோக்கியம் பேணப்படும்.

### 14.3 ஓட்டுதல் ஒத்த தன்மை கருவி:

உயரிய தொழில்நுட்பத்துடன் கூடிய ஓட்டுதல் ஒத்த தன்மை கருவி மூலம் சென்னை, திருச்சி, பொள்ளாச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. அவ்வகையில், 2013–2014–ஆம் ஆண்டில் 3,143 ஓட்டுநர்களுக்கும், 2014–2015–ஆம் ஆண்டு 3,976 ஓட்டுநர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 15. அரசு போக்குவரத்துக் கழகங்கள்:

### 15.1 மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட் :

மாநகர் போக்குவரத்துக் கழகம், நிர்வாக இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இதன் தலைமை அலுவலகம் சென்னையில் உள்ள பல்லவன் சாலையில் அமைந்துள்ளது. மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னைப் பெருநகரில் அதிக அளவில் பொதுப் போக்குவரத்து சேவை அளிக்கும் நிறுவனமாகத் திகழ்கிறது. மேலும், சென்னைப் பெருநகரின் அருகிலுள்ள காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களின் நலனுக்காக தன்னுடைய இயக்க எல்லையை விரிவுபடுத்தியுள்ளது.

- மொத்த பணிமனைகளின் எண்ணிக்கை **27** ஆகும். இப்போக்குவரத்துக் கழகத்தில் **806** வழித்தடங்களில் **3,531** வரையறுக்கப்பட்ட சேவைகளுடன் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை **3,794** ஆகும். மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை **25,219** ஆகும். சாதாரண, விரைவு, தாழ்தள, தொடர் மற்றும் வால்வோ குளிர்சாதன பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இப்போக்குவரத்துக் கழகத்தின் கூண்டு கட்டும் பிரிவு குரோம்பேட்டையில் உள்ளது.

- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள், பேருந்துகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு பணிமனைகளை அதிகரிக்க உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி, பாடியநல்லூர், வேளச்சேரி, கண்ணகி நகர், மகாகவி பாரதியார் நகர், பெசன்ட் நகர், திருவேற்காடு, ஆதம்பாக்கம், குரோம்பேட்டை, பெரம்பூர், குன்றத்தூர், பெரும்பாக்கம், தையூர், தாமரைப்பாக்கம் மற்றும் கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில் பணிமனைகளை ஏற்படுத்த அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் **19.02.2014** அன்று ஆதம்பாக்கம் மற்றும்

பெசன்ட் நகரில் புதிய பணிமனைகள் தொடங்கிவைக்கப்பட்டுள்ளன. மேலும் பாடியநல்லூர், மகாகவி பாரதியார் நகர், குரோம்பேட்டை–II, பெரம்பூர்–II, கண்ணகி நகர் மற்றும் குன்றத்தூர் ஆகிய இடங்களில் பணிமனை அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பெரும்பாக்கம் பணிமனைக்கு ஒப்பந்த புள்ளி கோருவது தொடர்பான பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 5 பணிமனைகளுக்கு நிலங்களை தேர்வு செய்யவும் மற்றும் கையகம் செய்யவும் நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- 2011–12–ஆம் ஆண்டு போக்குவரத்துத்துறை மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட குரோம்பேட்டை கூடுதல் பேருந்து கூண்டு கட்டும் பிரிவு **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் 26.06.2014 அன்று துவக்கி வைக்கப்பட்டது.
- 2014–15–ஆம் ஆண்டு போக்குவரத்துத்துறை மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட தண்டையார்பேட்டை மற்றும் அயனாவரத்தில் தகுதி

சான்று புதுப்பிக்கும் பிரிவுகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் **16.05.2011** முதல் **31.03.2015** வரை **330** புதிய பேருந்துகளும், **100** சிற்றுந்துகளும் **318** புதிய வழித்தடங்களும் தொடங்கப்பட்டுள்ளன.
- தாமாக முன்வந்து இரத்ததானம் செய்யும் திட்டத்தின் கீழ் இதுவரை **2,023** ஊழியர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.
- இப்போக்குவரத்துக் கழகம் **2012–2013–**ஆம் ஆண்டில் பேருந்துகளின் பயன்பாடு, உருளிப்பட்டை செயல்பாடு மற்றும் குறைந்த இயக்கச் செலவு ஆகியவற்றிற்காக (நகர் வகையில்) அனைத்து மாநில சாலைப் போக்குவரத்து கழகங்களின் கூட்டமைப்பிடமிருந்து (ASRTU) விருது பெற்றுள்ளது.
- இப்போக்குவரத்துக் கழகம் நகர்ப்புற சேவையில், பேருந்து இயக்கத்தில் அதிகபட்ச உயர்வுக்காக (Maximum Improvement in Vehicle Productivity) முதல் இடம் பெற்று, **2013–14–**ஆம்

ஆண்டுக்கான அனைத்து மாநில சாலைப் போக்குவரத்து கழகங்களின் கூட்டமைப்பிடமிருந்து (ASRTU) விருது பெற்றுள்ளது.

- மாநகர் போக்குவரத்துக் கழகம், மோனோ இரயில் திட்டத்தை செயல்படுத்தும் முகமை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது.
- மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் எல்லா பணிமனைகளிலும் புவி இருப்பிட முறைமை (GPS), பொது சிறுகட்டு வானலை சேவை (GPRS) மற்றும் மின்னணு பயணச்சீட்டு வழங்கும் கருவி (ETM) மூலம் நடத்துனர்களால் பயணிகளுக்கு பயணச் சீட்டுகளை வழங்கும் முறை ஆகியவை அமல்படுத்தப்பட்டுள்ளன.

இப்போக்குவரத்துக் கழகம் பயணிகளின் வசதிக்காக கீழ்க்கண்ட கூடுதல் வசதிகளை செய்து வருகிறது.

- தினந்தோறும் **250** நெரிசல் நேர பேருந்து சேவைகளும் மற்றும் **65** இரவு நேர பேருந்து சேவைகளும் இயக்கப்பட்டு வருகின்றன.

- மகளிர் மற்றும் சிறுவர்கள் சிரமமின்றி பயணம் செய்ய 200 சிறப்பு பேருந்துகள் 73 வழித்தடங்களில் சென்னையில் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், 2014–15–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட 50 சிறப்பு பேருந்துகள் தற்போது மகளிர் மற்றும் சிறுவர்களுக்காக இயக்கப்பட உள்ளன.
- சென்னையில் பயணம் செய்யும் பொதுமக்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில் போக்குவரத்து இணைப்பில்லா பகுதிகளிலிருந்து அருகிலுள்ள போக்குவரத்து மையங்களை இணைப்பதற்கு வசதியாக 100 சிற்றுந்துகள் 40 வழித்தடங்களில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. மேலும், 2014–15–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட 100 புதிய சிற்றுந்துகளை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் ஆணைக்கிணங்க, மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் 27 பேருந்து நிலையங்களில் பாலூட்டும்

தாய்மார்களுக்கான தனி அறைகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

**15.2 அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், சென்னை மாநகரைத் தலைமை இடமாகக் கொண்டு நிர்வாக இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இக்கழகம் தமிழகம் மட்டுமின்றி, கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திரா ஆகிய அண்டை மாநிலங்கள் மற்றும் புதுச்சேரியில் தன்னுடைய சேவையை விரிவுபடுத்தியுள்ளது.

- இக்கழகத்தின் கிளைகளின் எண்ணிக்கை 21 ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 1,099 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 1,037 ஆகும். இவற்றில் 656 பேருந்துகள் மாநிலத்திற்கு உள்ளேயும், 381 பேருந்துகள் ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களுக்கும் மற்றும் புதுச்சேரிக்கும் இயக்கப்பட்டு வருகின்றன. இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை அம்மா குடிநீர்

திட்டத்தில் பணிபுரியும் **59** பணியாளர்கள் உட்பட மொத்தம் **7,056** ஆகும். இக்கழகம் அதிசொகுசு, அதிநவீன சொகுசு, கிளாசிக் மற்றும் குளிர்சாதனம் போன்ற பல்வேறு வகையான பேருந்துகளை இயக்கி வருகின்றது.

- திண்டுக்கல், காரைக்குடி மற்றும் திருநெல்வேலி–2 ஆகிய புதிய பணிமனைகள் **18.06.2015** அன்று **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டன. ஒசூர் பணிமனையில் கட்டுமானப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.
- தேனி, கரூர் ஆகிய இடங்களில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு விரைவில் பணி துவங்க உள்ளது.
- திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் பொது மேலாளர் அலுவலகம் மற்றும் பணிமனை அமைப்பதற்காக, நாகமங்கலத்தில் **4.68** ஏக்கர் பரப்பில் நிலம் கண்டறியப்பட்டுள்ளது.
- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் **16.05.2011** முதல் **31.03.2015** வரை **453** புதிய பேருந்துகளும், **54** புதிய வழித்தடங்களும் தொடங்கப்பட்டுள்ளன.

- தாமாக முன்வந்து இரத்ததானம் செய்யும் திட்டத்தின் கீழ் இதுவரை **1,293** ஊழியர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.
- இப்போக்குவரத்துக் கழகம் **2012–2013–**ஆம் ஆண்டில், பேருந்து இயக்கத்தில் அதிகபட்ச உயர்வுக்கான (Highest Performance in Vehicle Productivity) (புறநகர வகையில்) முதலிடம் பெற்று அனைத்து மாநில சாலைப் போக்குவரத்து கழகங்களின் கூட்டமைப்பிடமிருந்து (ASRTU) விருது பெற்றுள்ளது.
- இப்போக்குவரத்துக் கழகம் புறநகர சேவையில், பேருந்து உற்பத்தி திறனில் அதிகபட்ச வளர்ச்சியில் (Maximum Improvement in Vehicle Productivity) முதல் இடமும் மற்றும் பேருந்து இயக்கத்தில் அதிகபட்ச உயர்வுக்கான (Highest Performance in Vehicle Productivity) முதல் இடமும் பெற்று, **2013–2014–**ஆம் ஆண்டுக்கான அனைத்து மாநில சாலைப் போக்குவரத்து கழகங்களின் கூட்டமைப்பிடமிருந்து (ASRTU) விருதுகளை பெற்றுள்ளது.

- இப்போக்குவரத்துக் கழகம், அரசு மற்றும் தனியார் பங்களிப்பின் மூலம் வணிக வளாகங்களைக் கட்டுவதற்காக மதுரை பெரியார் பேருந்து நிலையம், திருச்சி மத்திய பேருந்து நிலையம் மற்றும் சேலம் பழைய பேருந்து நிலையங்களை அடையாளம் கண்டுள்ளது.
- திருச்சி மற்றும் நாகர்கோவிலில் இப்போக்குவரத்து கழகத்தின் பேருந்து கூண்டு கட்டும் பிரிவு செயல்பட்டு வருகிறது.

இப்போக்குவரத்துக் கழகம் பயணிகளின் வசதிக்காக கீழ்க்கண்ட கூடுதல் வசதிகளை செய்து வருகிறது.

- பயணிகளின் சிறப்பான வசதிக்காக 03.10.2011 முதல் விமானம் மற்றும் இரயில்வேயில் அறிமுகப்படுத்தியுள்ளதைப் போல, வலைதளம் மற்றும் செல்லிடப்பேசி வாயிலாக பயணச்சீட்டு முன்பதிவு செய்யும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- வலைதளத்தில் முன்பதிவு செய்யும் முறையின் கீழ் (OTRS) தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களான

ஆந்திரா, கேரளா, கர்நாடகா மற்றும் புதுச்சேரி ஆகிய பகுதிகளில் 123 முன்பதிவு மையங்களில் **127** பயணச்சீட்டு வழங்கும் இடங்கள் உள்ளன.

- முதியவர்கள், மகளிர் மற்றும் நீரிழிவு நோயாளிகளின் வசதிக்காக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் உணவகம் மற்றும் கழிவறையுடன் கூடிய இரண்டு **கிளாசிக்** பேருந்துகள் **20.06.2013** முதல் சென்னையிலிருந்து ஸ்ரீரங்கம் வரையிலான வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன.
- **அம்மா குடிநீர்** அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் சார்பில் திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியில் உள்ள சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகத்தில் **2.47** ஏக்கர் பரப்பளவில் குடிநீர் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. **அம்மா குடிநீர்** **234** சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட **304** விற்பனை மையங்கள் மூலம் **1** லிட்டர் அளவு கொண்ட பாட்டில் ஒன்று ரூபாய் **10/–** க்கு விற்பனை செய்யப்படுகிறது.
- அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் மூன்று பணிமனைகளில் இணையதளம் பொது சிறுகட்டு

வானலை சேவை (GPRS), மின்னணு பயணச்சீட்டு வழங்கும் கருவி (ETM) மற்றும் புவி இருப்பிட முறைமை (GPS) மூலம் பயணச்சீட்டு வழங்கும் முறை ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன.

- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் ஆணைக்கிணங்க, அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தின் 2 பேருந்து நிலையங்களில் பாலூட்டும் தாய்மார்களுக்கான தனி அறைகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

### 15.3 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம் நகரைத் தலைமை இடமாகக் கொண்டு நிர்வாக இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகம் நகர, புறநகர மற்றும் மலைப்பகுதிகளில் போக்குவரத்து சேவையை கண்காணித்து மேம்படுத்த விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர்

ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்களை அமைத்து செயல்படுத்தி வருகின்றது.

- இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை **57** ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை **3,655** மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை **3,384** ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை **23,452** ஆகும். இக்கழகம், சாதாரண, விரைவு, அதிசொகுசு மற்றும் வால்வோ குளிர்சாதனம் போன்ற பல்வேறு வகையான பேருந்துகளை இயக்கி வருகின்றது.
- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள், நெய்வேலி, ஓரிக்கை–I, ஓரிக்கை–II, சேத்துபட்டு, சின்னசேலம், பேரணாம்பட்டு, சோளிங்கர், திருக்கழுக்குன்றம், செங்கம், காட்டுமன்னார் கோவில் மற்றும் ஏலாத்தூர் ஆகிய இடங்களில் **11** பணிமனைகளை அமைப்பதற்கான அறிவிப்பினை செய்துள்ளார்கள். இவற்றில் நெய்வேலி மற்றும் ஓரிக்கை ஆகிய பணிமனைகள் **மாண்புமிகு முதலமைச்சர்**

அவர்களால் **19.02.2014** அன்று தொடங்கிவைக்கப்பட்டன. சேத்துப்பட்டு புதிய பணிமனை **18.06.2015** அன்று **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. சின்ன சேலம், ஏலாத்தூர், சோளிங்கர், காட்டுமன்னார்கோயில், செங்கம், ஓரிக்கை–II மற்றும் பேரணாம்பட்டு ஆகிய இடங்களில் பணிமனைகளை அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள ஒரு பணிமனைக்கு நிலம் கையகம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

- பெருகி வரும் பயணிகளின் தேவைகளுக்கேற்ப, கடந்த நான்கு ஆண்டுகளில் **1,066 (1,052** பேருந்துகள் + **14** சிற்றுந்துகள்) புதிய பேருந்துகளும், **259** புதிய வழித்தடங்களும் தொடங்கப்பட்டுள்ளன.
- தாமாக முன்வந்து இரத்ததானம் செய்யும் திட்டத்தின் கீழ் இதுவரை **2,521** ஊழியர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.
- இப்போக்குவரத்துக் கழகம் அனைத்து மாநில சாலைப் போக்குவரத்து கழகங்களின்

கூட்டமைப்பிடமிருந்து (ASRTU) **2012–2013–**ஆம் நிதி ஆண்டில் கீழ்க்கண்ட நான்கு விருதுகளைப் பெற்றுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | புறநகர் சேவையில் சிறந்த ஒரு கிலோ மீட்டர் / லிட்டருக்கான எரிபொருள் திறனுக்காக | – | முதல் பரிசு |
| 2 | புறநகர் சேவையில் ஒரு கிலோ மீட்டர் / லிட்டருக்கான அதிகபட்ச முன்னேற்றத்திற்காக | – | முதல் பரிசு |
| 3 | புறநகர் சேவையில் வாகன உற்பத்தியில் உயரிய செயலுக்கான | – | இரண்டாம் பரிசு |
| 4 | புறநகர் சேவையில் குறைந்த பட்ச இயக்கச் செலவு (வரி மூலக்கூறு தவிர்த்து) | – | முதல் பரிசு |

- இப்போக்குவரத்துக் கழகம் புறநகர் சேவையில், பேருந்து இயக்கத்தில் அதிகபட்ச உயர்வுக்காக (Highest Performance in Vehicle Productivity) இரண்டாம் இடத்தை பெற்று **2013–14–**ஆம்

ஆண்டிற்கு அனைத்து மாநில சாலைப் போக்குவரத்து கழகங்களின் கூட்டமைப்பிடம் (ASRTU) இருந்து விருது பெற்றுள்ளது.

- இப்போக்குவரத்துக் கழகம் அரசு மற்றும் தனியார் பங்களிப்பு மூலம் வணிக வளாகங்களை கட்டுவதற்காக விக்கிரவாண்டி மற்றும் உளுந்தூர்பேட்டை ஆகிய இடங்களை அடையாளம் கண்டுள்ளது. பண்ருட்டி, வேலூர் மற்றும் காஞ்சிபுரத்தில் இப்போக்குவரத்து கழகத்தின் பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

இப்போக்குவரத்துக் கழகம் பயணிகளின் வசதிக்காக கீழ்க்கண்ட கூடுதல் வசதிகளை செய்து வருகிறது:–

- 1 முதல் 1 நிலை, 1 முதல் 3 நிலைகள், 1 முதல் 5 நிலைகள் மற்றும் 1 முதல் 6 நிலைகள் கொண்ட சிறப்பு சொகுசு பேருந்துகள் தொலைதூர பயணிகளுக்கு பயனளிக்கும் வகையில் இயக்கப்பட்டு வருகின்றன.

- ஒவ்வொரு மாதமும் சிறப்புப் பேருந்து இயக்கமாக விழுப்புரம் இயக்கப் பகுதியான சென்னை–திருவண்ணாமலை (பௌர்ணமி நாட்களில்) மற்றும் சென்னை–மேல்மலையனூர் மார்க்கத்தில் (அமாவாசை நாட்களில்) சென்னையிலிருந்து புறப்படும் பேருந்துகளுக்கு முன்பதிவு செய்யப்பட்டு, அதிசொகுசு மற்றும் விரைவுப் பேருந்துகள் பயணிகளுக்கு பயனளிக்கும் வகையில் இயக்கப்படுகின்றன.

**15.4 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட்:**

இப்போக்குவரத்துக் கழகம், சேலம் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு நிர்வாக இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இக்கழகத்தின் போக்குவரத்துச் சேவையை நகர, புறநகர மற்றும் மலைப்பகுதிகளில் கண்காணித்து மேம்படுத்த, சேலம் மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

- இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை **31** ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை **2,230** மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை **2,061** ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை **14,619** ஆகும். இக்கழகம் சாதாரண, விரைவு மற்றும் அதிசொகுசு போன்ற பல்வேறு வகையான பேருந்துகளை இயக்கி வருகின்றது.

- நாமக்கல் மற்றும் தருமபுரி ஆகிய இரண்டு இடங்களில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவு இக்கழகத்தால் செயல்படுத்தப்படுகிறது.

- பேருந்துகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு பணிமனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் அறிவிப்பின்படி, தம்மம்பட்டி மற்றும் ஓமலூர் ஆகிய இரண்டு புதிய பணிமனைகள் துவக்கி வைக்கப்பட்டன.

(1) **தம்மம்பட்டி பணிமனை:** தம்மம்பட்டி புதிய பணிமனைக்கான கட்டடப்பணி முடிக்கப்பட்டு **23.06.2013** முதல் பணிமனை செயல்படத் துவங்கியுள்ளது.

(2) **ஓமலூர் பணிமனை:** ஓமலூர் புதிய பணிமனை **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் **18.06.2015** அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

(3) **பள்ளப்பட்டி பணிமனை:** பள்ளப்பட்டி புதிய பணிமனைக்கான கட்டடப் பணி நடைபெற்று வருகிறது.

- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் **16.05.2011** முதல் **31.03.2015** வரை **506** புதிய பேருந்துகளும், **152** புதிய வழித்தடங்களும் தொடங்கப்பட்டு உள்ளன.
- தாமாக முன்வந்து இரத்ததானம் செய்யும் திட்டத்தின் கீழ் இதுவரை **4,979** ஊழியர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.
- இப்போக்குவரத்துக் கழகம் **2012–2013**–ஆம் ஆண்டுக்கான உருளிப்பட்டையில் உயரிய சாதனைக்கான விருதினை அனைத்து மாநில சாலைப் போக்குவரத்து கழகங்களின் கூட்டமைப்பிடமிருந்து (ASRTU) பெற்றுள்ளது.
- இப்போக்குவரத்துக் கழகம் புறநகர் சேவையில், உருளிப்பட்டை பயன்பாட்டில் (Highest Tyre Performance) முதல் இடத்தையும் மற்றும் டீசல்

பயன்பாட்டில் அதிகபட்ச செயல்திறனில் (Maximum Improvement in KMPL) இரண்டாம் இடத்தையும் பெற்று, **2013–14–**ஆம் ஆண்டிற்கு அனைத்து மாநில சாலைப் போக்குவரத்து கழகங்களின் கூட்டமைப்பிடமிருந்து (ASRTU) விருதுகளை பெற்றுள்ளது.

இப்போக்குவரத்துக் கழகம் பயணிகளின் வசதிக்காக கீழ்க்கண்ட கூடுதல் வசதிகளை செய்து வருகிறது.

- ஏற்காடு, கொல்லிமலை, ஒகேனக்கல், தாரமங்கலம், திருச்செங்கோடு (அர்த்தநாரீஸ்வரர் கோவில்) நாமக்கல் (ஆஞ்சநேயர் கோவில்) மற்றும் மேட்டூர் ஸ்டான்லி அணை போன்ற சுற்றுலா மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு பேருந்துகளை இயக்கி வருகிறது.

**15.5 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட் :**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர், நிர்வாக இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. கோயம்புத்தூர் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு நகர,

புறநகர மற்றும் மலைப்பகுதிகளில் பேருந்து சேவையை இக்கழகம் வழங்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகத்தின் போக்குவரத்து சேவையைக் கண்காணிக்க கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் ஊட்டி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

- இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 44 ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 3,283 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 2,983 ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 21,061 ஆகும். இக்கழகம் சாதாரண, விரைவு, அதிசொகுசு மற்றும் குளிர்சாதனம் போன்ற பல்வேறு வகையான பேருந்துகளை இயக்கி வருகின்றது. இக்கழகத்தில் 5 பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் உள்ளன. அவற்றில், பொள்ளாச்சியில் இரண்டும், தாராபுரம், உடுமலைப்பேட்டை மற்றும் பள்ளிபாளையம் ஆகிய இடங்களில் தலா ஒன்றுமாக பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் செயல்படுகின்றன.

- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் சூலூர், மதுக்கரை, கிணத்துக்கடவு, பேரூர், பவானி மற்றும் ஒண்டிப்புதூர் (கூடுதல் பணிமனை) ஆகிய இடங்களில் புதிய பணிமனைகளைக் கட்டுவதற்கு அறிவிப்பு செய்துள்ளார்கள். அன்னூர் மற்றும் கொடுமுடி ஆகிய இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டு **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் புதிய பணிமனைகள் **26.06.2014** அன்று தொடங்கி வைக்கப்பட்டன. ஒண்டிப்புதூர் புதிய பணிமனைக்கான பணிகள் முடிக்கப்பட்டு **18.06.2015** அன்று **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

<u>**நடவடிக்கையிலுள்ள பணிமனைகள்**</u> i) <u>**சூலூர்**</u> **: 1.50** ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டு பராமரிப்புக் கூடம் மற்றும் மின்னாக்கி அறை (Generator Room) அமைக்கும் பணிகளுக்கான பணி ஆணை வழங்கப்பட்டு, சங்கிலி வேலி மற்றும் நிலத்தை சமன்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. ii) **மதுக்கரை: 3** ஏக்கர் நிலத்தினை கையகப்படுத்துவதற்கான ஆணை வழங்கப்பட்டு

முன் நுழைவு அனுமதி பெறப்பட்டுள்ளது. iii) **கிணத்துக்கடவு மற்றும் பேரூர்:** நிலம் தெரிவு செய்யப்பட்டு கையகப்படுத்துவதற்கான பணி நடைபெற்று வருகிறது. iv) **பவானி:** ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான பணி நடைபெற்று வருகிறது.

- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் **26.06.2014** அன்று பொள்ளாச்சியில் கூண்டுகட்டும் பிரிவு கூடுதலாகத் தொடங்கப்பட்டுள்ளது.
- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் **16.05.2011** முதல் **31.03.2015** வரை **780** புதிய பேருந்துகளும், **( 736** புதிய பேருந்துகள் + **44** சிற்றுந்துகள்) **206** புதிய வழித்தடங்களும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.
- தாமாக முன்வந்து இரத்ததானம் செய்யும் திட்டத்தின் கீழ் இதுவரை **2,653** ஊழியர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.
- இப்போக்குவரத்துக் கழகம் கோயம்புத்தூர் நகர் பேருந்து சேவையில் ஒரு லிட்டருக்கு கிலோ மீட்டர் இயக்க செயல்பாட்டு திறனுக்கான **2012–2013–**ஆம்

ஆண்டிற்கான விருதினை அனைத்து மாநில சாலைப் போக்குவரத்து கழகங்களின் கூட்டமைப்பிடமிருந்து (ASRTU) பெற்றுள்ளது.

- இப்போக்குவரத்துக் கழகம் புறநகர் சேவையில், டீசல் பயன்பாட்டில் எரிபொருள் சிக்கனத்திற்காக (Maximum Improvement in KMPL) முதல் இடம் பெற்று, **2013–14–**ஆம் ஆண்டிற்கு அனைத்து மாநில சாலைப் போக்குவரத்து கழகங்களின் கூட்டமைப்பிடமிருந்து (ASRTU) விருது பெற்றுள்ளது.

இப்போக்குவரத்துக் கழகம் பயணிகளின் வசதிக்காக கீழ்க்கண்ட கூடுதல் வசதிகளை செய்து வருகிறது.

- வால்பாறை, மருதமலை, ஊட்டி மற்றும் கூடலூர் ஆகிய இடங்களில் பேருந்து நிலையங்கள் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.
- இப்போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பர்லியார் மற்றும் ஹாசனூர் ஆகிய இடங்களில் பயண வழி உணவகங்கள் செயல்படுகின்றன.

- பண்ணாரி, காரமடை, பூண்டி, பழனி, வால்பாறை, மேட்டுப்பாளையம், குன்னூர் மற்றும் ஊட்டி போன்ற சுற்றுலா மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்குப் பேருந்துகளை இயக்கி வருகிறது.

- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூரின் 4 பேருந்து நிலையங்களில் பாலூட்டும் தாய்மார்களுக்கான தனி அறைகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

## 15.6 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம், நிர்வாக இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இதன் தலைமை அலுவலகம் கும்பகோணம் நகரில் உள்ளது. இப்போக்குவரத்துக் கழகத்தின் போக்குவரத்து சேவையை கண்காணிக்க கும்பகோணம், திருச்சி, காரைக்குடி, புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மற்றும் கரூர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு

வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம் நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் பேருந்துகளை இயக்கி வருகிறது.

- இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை **59** ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை **3,851** மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை **3,589** ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை **24,417** ஆகும். இக்கழகம் சாதாரண, விரைவு, அதிநவீன, அதிசொகுசு மற்றும் குளிர்சாதனம் போன்ற பல்வேறு வகையான பேருந்துகளை இயக்கி வருகின்றது. இக்கழகத்திற்கு பொறையார், கரூர், காரைக்குடி மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் உள்ளன.

- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள், பேருந்துகளின் எண்ணிக்கைக்கேற்ப புதிய பணிமனைகளை அமைக்க உத்தரவிட்டுள்ளார்கள். இதன்படி, ஆலங்குடி மற்றும் அரவங்குறிச்சியில் பணிமனைகள் கட்டி முடிக்கப்பட்டு **மாண்புமிகு முதலமைச்சர்**

அவர்களால் **19.02.2014** அன்று துவக்கி வைக்கப்பட்டன. மேலும், கந்தர்வக் கோட்டை, குளித்தலை, திருவையாறு, மற்றும் உப்பிலியாபுரம் ஆகிய இடங்களில் **18.06.2015** அன்று **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் புதிய பணிமனைகள் தொடங்கி வைக்கப்பட்டன. இலுப்பூர் மற்றும் எடமலைப்பட்டிபுதூர் ஆகிய **2** இடங்களில் கட்டுமானப்பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. **5** பணிமனைகளில் ஒப்பந்தப் பணி / இயக்குநர் குழுமத்தின் ஒப்புதல் பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள **6** பணிமனைகளுக்கு நிலம் தேர்வு செய்தல்/கையகப்படுத்துதல் பணி நடைபெற்று வருகிறது. புதுக்கோட்டையில் உருளிப்பட்டை புதுப்பித்தல் மற்றும் தகுதிச் சான்றிதழ் பிரிவுகள் கட்டுவதற்கு நிலமாற்றம் செய்யப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் வெகு விரைவில் துவங்கப்பட உள்ளன. கரூரில் கூண்டு கட்டும் பிரிவுக்காக நிலம் கையகப்படுத்தி ஒப்பந்தப்புள்ளிகள் பெற விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- **16.05.2011** முதல் **31.03.2015** வரை **946** **(942** பேருந்துகள் மற்றும் **4** சிற்றுந்துகள்) புதிய பேருந்துகளும், **330** புதிய வழித்தடங்களும் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் தொடங்கப்பட்டுள்ளன.

- தாமாக முன்வந்து இரத்ததானம் செய்யும் திட்டத்தின் கீழ் இதுவரை **3,080** ஊழியர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

- இப்போக்குவரத்துக் கழகம் **2012–2013**–ஆம் ஆண்டிற்கான அதிகபட்ச இயக்க செயல்திறனுக்கான விருதினை அனைத்து மாநில சாலைப் போக்குவரத்து கழகங்களின் கூட்டமைப்பிடமிருந்து (ASRTU) பெற்றுள்ளது.

- இப்போக்குவரத்துக் கழகம் புறநகர் சேவையில், குறைந்தபட்ச இயக்கச் செலவிற்காக (Minimum Operational Cost) முதல் இடமும், டீசல் பயன்பாட்டில் அதிகபட்ச செயல்திறனுக்காக (Highest KMPL in Fuel Efficiency) முதல் இடமும், டீசல் பயன்பாட்டில் அதிகபட்ச வளர்ச்சிக்காக

(Maximum Improvement in KMPL) இரண்டாம் இடமும் பெற்று, **2013–14–**ஆம் ஆண்டிற்கு அனைத்து மாநில சாலைப் போக்குவரத்து கழகங்களின் கூட்டமைப்பிடமிருந்து (ASRTU) விருதுகளை பெற்றுள்ளது.

- இப்போக்குவரத்துக் கழகம், அரசு மற்றும் தனியார் பங்களிப்பு மூலம் வேளாங்கண்ணியில் வணிக வளாகம் கட்டுவதற்கான இடத்தை தேர்வு செய்துள்ளது.

இப்போக்குவரத்துக் கழகம் பயணிகளின் வசதிக்காக கீழ்க்கண்ட கூடுதல் வசதிகளைச் செய்து வருகிறது.

- நாகூர், வேளாங்கண்ணி, திருநள்ளார், சுவாமிமலை, தஞ்சாவூர், ஸ்ரீரங்கம் மற்றும் இராமேஸ்வரம் போன்ற சுற்றுலா மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்குப் பேருந்துகளை இயக்கி வருகிறது.

## 15.7 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை, நிர்வாக இயக்குநரின் தலைமையின் கீழ்

இயங்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகம் மதுரை மாநகரைத் தலைமையிடமாகக் கொண்டு நகர், புறநகர் மற்றும் மலைப்பகுதிகளில் பேருந்து சேவையை இயக்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து சேவையைக் கண்காணிக்க மதுரை, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

- இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 37 ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 2,588 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 2,298 ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 16,079 ஆகும். இக்கழகம், சாதாரண மற்றும் விரைவு பேருந்துகளை இயக்கி வருகின்றது. மதுரை, வத்தலக்குண்டு மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் உள்ளன.
- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள், பேருந்துகளின் எண்ணிக்கைக்கேற்ப புதிய பணிமனைகளை அமைக்க உத்தரவிட்டுள்ளார்கள். இதன்படி,

சிவகாசியில் கட்டிமுடிக்கப்பட்ட புதிய கட்டடம் **19.02.2014** அன்று **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. மேலும், செக்கானூரணியில் ஒரு புதிய பணிமனை, திருபுவனம் மற்றும் குமுளி ஆகியவற்றில் இரு புதிய கட்டடங்கள் **18.06.2015** அன்று **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டன. மேலும், வத்திராயிருப்பு மற்றும் இராஜபாளையம் II ஆகிய **2** இடங்களில் புதிய பணிமனைகள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மீதமுள்ள **3** பணிமனைகளான அலங்காநல்லூர், ஒட்டன்சத்திரம் மற்றும் காரியாபட்டி ஆகிய இடங்களில் நிலங்களைத் தேர்வு செய்தல் மற்றும் கையகம் செய்தல் போன்ற பணிகளுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- மேலும், தேனியில் ஒரு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையம் அமைப்பதற்கு நிலம் தெரிவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் **16.05.2011** முதல் **31.03.2015** வரை **507** புதிய பேருந்துகளும், **91** புதிய வழித்தடங்களும் தொடங்கப்பட்டுள்ளன.
- தாமாக முன்வந்து இரத்ததானம் செய்யும் திட்டத்தின் கீழ் இதுவரை **2,482** ஊழியர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.
- இப்போக்குவரத்துக் கழகம் வாகன உற்பத்தி திறனில் உயரிய செயல்பாட்டிற்காக இரண்டாம் இடத்தை பெற்று **2013–14–**ஆம் ஆண்டிற்கான அனைத்து மாநில சாலைப் போக்குவரத்து கழகங்களின் கூட்டமைப்பிடமிருந்து (ASRTU) விருதினை பெற்றுள்ளது.

இப்போக்குவரத்துக் கழகம் பயணிகளின் வசதிக்காக கீழ்க்கண்ட கூடுதல் வசதிகளை செய்து வருகிறது.

- வீரபாண்டி, இருக்கன்குடி மற்றும் பழனி ஆகிய இடங்களுக்கு விழாக்கால சிறப்பு பேருந்துகளை இயக்கி வருகிறது.

## 15.8 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், நிர்வாக இயக்குநரின் தலைமையின் கீழ் திருநெல்வேலி நகரில் இயங்கி வருகிறது. இப்போக்குவரத்து கழகத்தின் போக்குவரத்து சேவையை கண்காணிக்க திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், இப்போக்குவரத்துக் கழகம் நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் பேருந்துகளை இயக்கி வருகிறது.

- இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 29 ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 1,974 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 1,801 ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 12,915 ஆகும். இப்போக்குவரத்துக்கழகம், சாதாரண, விரைவு, அதிநவீன மற்றும் அதிசொகுசு போன்ற பல்வேறு வகையான பேருந்துகளை இயக்கி வருகின்றது. திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில்

ஆகிய இடங்களில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் உள்ளன.

- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள், பேருந்துகளின் எண்ணிக்கைக்கேற்ப புதிய பணிமனைகளை அமைக்க உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி, சேரன்மகாதேவி, ஆலங்குளம் மற்றும் சாத்தான்குளம் ஆகிய இடங்களில் 3 புதிய பணிமனைகள் தொடங்க அறிவிப்பு செய்யப்பட்டது. சேரன்மகாதேவி பணிமனையில் அனைத்து கட்டுமானப் பணிகளும் முடிவடைந்து 18.06.2015 அன்று **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. சாத்தான்குளத்தில் கட்டடப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆலங்குளம் பணிமனைக்கு நிலம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் 05.07.2014 அன்று திருநெல்வேலியில் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய தலைமை அலுவலகக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் **16.05.2011** முதல் **31.03.2015** வரை **406** புதிய பேருந்துகளும், **66** புதிய வழித்தடங்களும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.
- தாமாக முன்வந்து இரத்ததானம் செய்யும் திட்டத்தின் கீழ் இதுவரை **331** ஊழியர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.
- இப்போக்குவரத்துக் கழகம் அரசு மற்றும் தனியார் பங்களிப்பு மூலம் வணிக வளாகங்களைக் கட்டுவதற்காக பாளையங்கோட்டை, கட்டபொம்மன் நகர் மற்றும் வண்ணாரப்பேட்டை புறவழிச்சாலை ஆகிய இடங்களை அடையாளம் கண்டுள்ளது.

இப்போக்குவரத்துக் கழகம் பயணிகளின் வசதிக்காக கீழ்க்கண்ட கூடுதல் வசதிகளை செய்து வருகிறது.

- திருச்செந்தூர், சங்கரன்கோவில், உவரி, கன்னியாகுமரி மற்றும் குற்றாலம் ஆகிய வழிபாட்டு மற்றும் சுற்றுலா தலங்களுக்குப் பேருந்துகளை இயக்கி வருகிறது.

- **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலியின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு பேருந்து நிலையத்தில் பாலூட்டும் தாய்மார்களுக்கான தனி அறை அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**16. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் :**

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் **25.03.1975** அன்று தொடங்கப்பட்டு தமிழகத்தில் உள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கு தேவையான மூலதனம் மற்றும் நடைமுறை மூலதன நிதி உதவியைப் பொது மக்களிடமிருந்து வைப்பீடுகள் பெறுவதன் மூலம் பூர்த்தி செய்து, அரசின் வரவு செலவு திட்டத்தைச் சாராமல் இருக்கும்பொருட்டு துவக்கப்பட்டது. இந்த நிறுவனம் இந்திய ரிசர்வ் வங்கியிடம் வங்கியல்லாத நிதி நிறுவனமாகப் பதிவு செய்துள்ளது.

**வைப்பீடுகள்**

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் பொது மக்களிடம் முதலீட்டிற்கு ஏற்ற நிறுவனம் என்ற

நம்பகத்தன்மையைத் தொடர்ந்து பெற்று வந்துள்ளது. **31.03.2015** அன்றுள்ளபடி மொத்த வைப்புத்தொகை ரூபாய் **1,635.18** கோடியாகும்.

**<u>கடன்கள்</u>**

இந்நிறுவனம் தொடங்கப்பட்ட ஆண்டு முதல் வழங்கிய கடனுதவியால் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் இதுவரை **47,448 (31.03.2015** வரை**)** புதிய பேருந்துகளை வாங்கியுள்ளன. மேலும், இந்நிறுவனம் துவக்கப்பட்டதிலிருந்து **31.03.2015** வரை தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களுக்கு ரூ.**1,667.44** கோடிக்கு கடனுதவி அளித்துள்ளது.

**<u>2015–16–ம் ஆண்டின் திட்டங்கள்</u>**

அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும் வரும் நிதியாண்டில், **1,165** புதிய பேருந்துகள் வாங்க நிதியுதவி அளிக்கவும், மோட்டார் வாகன வரி, ஊக்கத்தொகை மற்றும் நடைமுறை மூலதனம் ஆகியவற்றிற்கு நிதியுதவி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**17. பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு:**

பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு, 1984–ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் போக்குவரத்துத்துறை வளர்ச்சிக்கான ஆலோசனைகளை அளிக்கும் நோக்கத்துடன் ரூ.50 இலட்சம் அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடனும் ரூ.10 இலட்சம் செலுத்தப்பட்ட மூலதனத்துடனும், தமிழக அரசின் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக தொடங்கப்பட்டது. இது அரசு போக்குவரத்துக் கழகங்களின் வளர்ச்சிக்கான ஆலோசனைகளை அளிக்கிறது.

இந்நிறுவனம் தகவல் தொழில்நுட்பம், மென்பொருள் தயாரிப்பு, ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்குதல், போக்குவரத்து பணி, நவீன தொழில்நுட்ப போக்குவரத்து முறைமை ஆகிய பல்வேறு துறைகளுக்கும் தன் ஆலோசனை சேவைகளை அளித்துள்ளது. தகுதி வாய்ந்த ஆலோசகர் குழுவினைப் பெற்றுள்ள பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு, வல்லுநர்களின் சேவைகளைப் பயன்படுத்தி சிறப்பு வாய்ந்த அறிவுரைப் பணி நிறுவனமாக விளங்குகிறது.

**கணினி, போக்குவரத்து மற்றும் போக்குவரத்து வசதி பிரிவு**

இந்நிறுவனம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களின் எல்லா பேருந்துகளுக்கும் கையடக்க மின்னணு பயணச்சீட்டு வழங்கும் கருவிகளைக் கொள்முதல் செய்தல் மற்றும் அவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், மின்னணு பயண அட்டை திட்டத்தினை சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் செயல்படுத்துதல் ஆகிய திட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

மேலும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மற்றும் இதர அரசு போக்குவரத்துக் கழகங்களுக்காக கணினி மூலம் பயணச்சீட்டு முன்பதிவு செய்யும் திட்டம், சென்னை கோயம்பேட்டில் உள்ள புறநகர் பேருந்து நிலையத்தில் உதவி மையம் இயக்குதல், இயக்க இயலாத பேருந்துகளை இணையதளம் வழிச் செயல்பாடு மூலம் பொது ஏலத்திற்கு விடுவது, தமிழ்நாடு அரசு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறைக்கான இணையதளம் உருவாக்குதல், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு தகவல்களை பராமரித்தல், அரசு போக்குவரத்துக் கழக பயணிகளுக்கு

குறுஞ்செய்தி வழியாக தகவல் தெரிவித்தல், தமிழ்நாடு மாநில ஆவணக் காப்பகத்திற்கு நூலகத் தகவல் திட்டம் மற்றும் ஆவண டிஜிட்டல் மயமாக்குதல் ஆகிய சீரிய பணிகளை இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

**<u>எதிர்கால வாய்ப்புகள்:</u>**

தமிழ்நாடு அரசு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறைக்கான இணையதளம் வழியாகப் பழைய வாகனங்களைப் பொது ஏலத்திற்கு விடுவது, அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கும் தேவையான பொது மென்பொருள் தயாரிக்கும் திட்டம் மற்றும் அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கும் கணினி வாங்குவது மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், மற்றும் தஞ்சாவூரில் உள்ள சரஸ்வதி மஹால் நூலகத்தில் உள்ள பதிவேடுகளை மென்பொருள் மூலம் பாதுகாத்தல் மற்றும் ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்குதல், கணினி கொள்முதல் செய்தல், தமிழ்நாடு ஆவண காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித்துறையிலுள்ள கணினிகளின் ஆண்டு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை பல்லவன்

போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு நிறுவனம் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கையாகும்.

**18. சாலைப் போக்குவரத்து நிறுவனம் :**

சாலைப் போக்குவரத்து நிறுவனம் இந்திய சங்கங்கள் பதிவு சட்டம் **1860–**ன் கீழ் பதிவு செய்யப்பட்டு, **1976–**ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. சாலைப் போக்குவரத்து தொடர்பான மேம்பாட்டு பணிகள், சாலை விபத்து ஆய்வு மற்றும் ஆராய்ச்சி பணிகள், பேருந்து தரம் மற்றும் பேருந்து மேலாண்மை, அரசு போக்குவரத்துக் கழகங்களால் கொள்முதல் செய்யப்படும் உதிரி பாகங்களின் தரத்தினைப் பரிசோதித்தல், போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

சாலைப் போக்குவரத்து நிறுவனம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுடன் இணைந்து கும்மிடிப்பூண்டி, திருச்சி மற்றும் **15** இடங்களில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையங்களை நடத்தி வருகிறது. மேலும், சிறுவாகன ஓட்டுநர் பயிற்சி மையங்களையும் சென்னை தரமணி மற்றும்

திருச்சி ஆகிய இடங்களில் செயல்படுத்தி வருகின்றது. **2014–15**வரை **17** மையங்களில் மொத்தம் **53,878** நபர்கள் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சியினை வெற்றிகரமாக முடித்துள்ளார்கள்.

இந்நிறுவனமானது ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி அட்டவணை தயாரித்து சாலை போக்குவரத்து நிறுவனம் மற்றும் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகங்களில், போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு புத்தாக்கப் பயிற்சிகள் அளித்து வருகின்றது. **2014–15** வரை **1,642** புத்தாக்கப் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இவற்றில் மொத்தம் **34,680** போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

இந்நிறுவனத்தால் **ரூ.786.47** இலட்சம் செலவில் பயிற்சி அளிக்க செயற்குறிப்பு அளிக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக **ரூ.259.20** இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. முதல் அணிக்கான பயிற்சி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

இந்நிறுவன பரிசோதனைக் கூடத்தில் **66** மோட்டார் வாகன உதிரிபாகங்களைப் பரிசோதனை செய்யும் தானியங்கி உபகரணங்கள் நிறுவப்பட்டுள்ளன**.** இதுவரை **5,728** மாதிரிக் கூறுகள் (Samples) பரிசோதனை செய்யப்பட்டுள்ளன**.**

சாலை போக்குவரத்து நிறுவனத்தின் ஆராய்ச்சி பிரிவு இதுவரை **519** ஆராய்ச்சி அறிக்கைகள், **29** ஆலோசனை அறிக்கைகள், விபத்து ஆராய்ச்சி கையேடு மற்றும் தொழில்நுட்ப கையேடு ஆகியவற்றை போக்குவரத்து கழகங்களுக்காக வெளியிட்டுள்ளது**.** இந்த கையேடு, அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள் விபத்துக்குள்ளாகும் போது விசாரணை செய்ய மிகவும் உதவிகரமாக உள்ளது**.** இந்நிறுவனம் அரசு போக்குவரத்துக் கழக நன்மைக்காக தொழில்நுட்பக் கையேட்டை வெளியிட்டுள்ளது**.**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கு தேவையான முக்கிய பொருட்களாகிய பேருந்து அடிச்சட்டங்கள், உருளிப்பட்டை, முழுவதுமாக கட்டப்பட்ட பேருந்து, பேருந்து கூண்டு கட்டுதல், பயணச்சீட்டு அச்சிடுதல், உருளிப்பட்டை புதுப்பிக்கத்

தேவையான அடிப்படைப் பொருட்கள், மசகு எண்ணெய் (லூப்ரிகன்ட்ஸ்) மற்றும் அம்மா குடிநீர் தயாரிப்பதற்கான மூலப் பொருட்கள் ஆகியவைகளின் விலை மற்றும் ஒப்பந்த விதிகளை முடிவு செய்ய, சாலைப் போக்குவரத்து நிறுவனம், முகமை நிறுவனமாக அரசால் நியமிக்கப்பட்டுள்ளது.

**சாலை போக்குவரத்து நிறுவனத்தால் இயக்கப்படும் கல்வி நிறுவனங்கள்:-**

**(அ) சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரி, ஈரோடு**

இந்நிறுவனத்தின் சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரி **1984**–ஆம் ஆண்டு ஈரோட்டில் துவக்கப்பட்டு, கடந்த **31** ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் தற்பொழுது கற்பிக்கப்படும் பிரிவுகள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:–

| வ. எண். | பிரிவு | தொடங்கப்–பட்ட ஆண்டு | ஆண்டிற்கு அனுமதிக்–கப்பட்ட மாணவர்–களின் எண்ணிக்கை | தற்போது முதலாண்டில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை | முதலாண்டு முதல் இறுதி ஆண்டு முடிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (அ) பி.ஈ., / பி.டெக் பட்டப் படிப்புகள் | | | | | |
| 1. | தானியங்கி பொறியியல் | 1984 | 60 | 60 | 237 |
| 2. | இயந்திர பொறியியல் | 1984 | 60 | 59 | 276 |
| 3. | கட்டடக் கலை பொறியியல் | 1984 | 60 | 59 | 232 |

| வ. எண். | பிரிவு | தொடங்கப்–பட்ட ஆண்டு | ஆண்டிற்கு அனுமதிக்–கப்பட்ட மாணவர்–களின் எண்ணிக்கை | தற்போது முதலாண்டில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை | முதலாண்டு முதல் இறுதி ஆண்டு முடிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 4. | கணினி அறிவியல் மற்றும் தகவல் தொடர்பியல் | 1984 | 60 | 58 | 268 |
| 5. | மின்னணுவியல் & தொலை தொடர்பு பொறியியல் | 1992 | 60 | 60 | 271 |
| 6. | மின்சாரம் மற்றும் மின்னணு பொறியியல் | 1992 | 60 | 57 | 268 |
| 7. | தகவல் தொழில்நுட்பவியல் | 2002 | 60 | 50 | 251 |
| **மொத்தம்** | | | **420** | **403** | **1803** |

| வ. எண். | பிரிவு | தொடங்கப்–பட்ட ஆண்டு | ஆண்டிற்கு அனுமதிக்–கப்பட்ட மாணவர்–களின் எண்ணிக்கை | தற்போது முதலாண்டில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை | முதலாண்டு முதல் இறுதி ஆண்டு முடிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (ஆ) முதுகலை பட்ட மேற் படிப்புகள் | | | | | |
| 1. | கணினி பயன்பாட்டில் முதுகலை பட்டம் (MCA) | 1996–97 | 60 | 3 | 115 |
| 2. | முதுகலை பட்டம் (கட்டடவியல்) | 2003–04 | 24 | 24 | 42 |
| 3. | முதுகலை பட்டம் (கணினி அறிவியல்) | 2014–15 | 24 | 21 | 21 |
| **மொத்தம்** | | | **108** | **48** | **178** |

இக்கல்லூரி இதுவரை 8,057 பொறியியல் பட்டதாரிகளையும், 831 முதுநிலை கணினி பயன்பாடு பட்டதாரிகளையும், 144 முதுகலை பொறியியல் (கட்டடவியல்) பட்டதாரிகளையும், 18 முதுகலை பொறியியல் (வெப்பவியல்) பட்டதாரிகளையும்

உருவாக்கியுள்ளது. கல்லூரி வளாகத்தில் நடைபெறும் வேலைவாய்ப்பு நேர்முகத் தேர்வில் இவ்வாண்டில் இதுவரை 121 மாணவ, மாணவியர்கள் வேலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**(ஆ) சாலை போக்குவரத்து நிறுவன மருத்துவக் கல்லூரி, பெருந்துறை**

இந்நிறுவனத்தின் கீழ் இயங்கிவரும் மருத்துவக் கல்லூரி 1986—ல் ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் தொடங்கப்பட்டு 1992—93 ஆம் கல்வி ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றது. இக்கல்லூரியில் ஆண்டொன்றிற்கு 60 மாணவர்கள் மருத்துவ பட்டப்படிப்பில் சேர்ந்து பயின்று வருகிறார்கள். இக்கல்லூரியில் தற்சமயம் மொத்தம் 304 மாணவ, மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றார்கள். மேலும், 58 மாணவர்கள் கட்டாயச் சுழற்சி உள்ளிருப்பு மருத்துவப் பணிக்கான பயிற்சி பெற்று வருகின்றனர்.

பெருந்துறை மருத்துவக் கல்லூரியில் 103 மருத்துவர்களும், 125 மருத்துவம் சார்ந்த பணியாளர்களும், 121 இதர பணியாளர்களும் ஆக மொத்தம் 349

பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இக்கல்லூரி இதுவரை **1,311** மருத்துவர்களை உருவாக்கியுள்ளது.

**(இ) செவிலியர் பட்டயப்பள்ளி**

மேலும், இம்மருத்துவக் கல்லூரி வளாகத்தில் செவிலியர் பட்டயப் பள்ளி **2008–09**–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இப்பள்ளியில் நடத்தப்படும் செவிலியர் பட்டயப் படிப்பில் ஆண்டுதோறும் **20** மாணவியர்கள் சேர்க்கப்படுகின்றனர். இந்த ஆண்டு **18** இடங்கள் போக்குவரத்துக் கழக பணியாளர்கள் மற்றும் அலுவலர்களின் பெண் வாரிசுகள் மூலம் நிரப்பப்பட்டன. இதுவரை 77 செவிலியர்களை இப்பள்ளி உருவாக்கியுள்ளது.

**(ஈ) பல்தொழில்நுட்ப பயிலகக் கல்லூரிகள்**

சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் கீழ் மூன்று பல்தொழில்நுட்ப பயிலகக் கல்லூரிகள் முறையே குரோம்பேட்டை (சென்னை), பர்கூர் (கிருஷ்ணகிரி) மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் **1992–93**ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றன. **2013–14**–ஆம் ஆண்டில் ஒவ்வொரு கல்லூரியிலும் **60** மாணவர்களை

ஆண்டுதோறும் அனுமதிக்கும் வகையில் மூன்று தொழில்நுட்ப பயிலகங்களிலும் இயந்திரவியல் தொழில்நுட்ப பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை இக்கல்லூரியில் பட்டயம் பெற்றவர்களின் எண்ணிக்கை 7,925.

**19. மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறை:**

தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசுத்துறை வாகனங்களின் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக துணை இயக்குநர்களின் தலைமையின்கீழ் மூன்று மண்டல பணிமனைகள் உள்ளிட்ட 20 அரசு தானியங்கி பணிமனைகளும், அவைகளின் செயல்பாடுகளை முறையாக கண்காணித்து நடைமுறைப்படுத்த இயக்குநரைத் துறைத் தலைவராகக் கொண்ட மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறை கடந்த 63 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வருகிறது.

இத்துறை, மாநிலம் முழுவதிலும் உள்ள 20,541–க்கும் மேற்பட்ட அரசுத்துறை வாகனங்களை பராமரித்து வருகிறது. தலைமைச்செயலகத்தில் உள்ள பராமரிப்பு நிலையம் முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசுச் செயலர்களின் வாகனங்களின் சிறு பழுதுகளை நீக்கி சுத்திகரிப்புப்

பணிகளை கவனிப்பதற்காக செயல்பட்டு வருகிறது. அரசுத்துறை ஊர்திகளுக்கு எரிபொருள் வழங்குவதற்காக இத்துறையின் கட்டுப்பாட்டில் மொத்தம் **9** எரிபொருள் வழங்கும் நிலையங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

அரசுத் துறை ஊர்திகளுக்கு தேவையான வசதிகளுடன் சிக்கனமான, திறமையான மற்றும் தரமான சேவை அளிப்பதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

## 20. சென்னை ஒருங்கிணைந்த பெருநகர் போக்குவரத்து ஆணையம் (CUMTA):

சென்னை மாநகருக்காக ஒருங்கிணைந்த பெருநகர் போக்குவரத்து குறித்த அனைத்து அம்சங்களையும் கண்காணிக்க, ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணையத்தை உருவாக்குகின்ற அடிப்படைப் பணிகளை அரசு தொடங்கியுள்ளது. சென்னையில் உள்ள பல்வேறு பெரிய போக்குவரத்து முகமைகளான அதிவேக மக்கள் திரள் போக்குவரத்து (MRTS), செயல்படுத்தப்படவுள்ள மோனோ இரயில் திட்டம், சென்னை மெட்ரோ இரயில், மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னை மாநகராட்சி, சென்னை போக்குவரத்துக் காவல் மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் ஆகியவற்றிற்கு இடையே மேலான

ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துவதே சென்னை ஒருங்கிணைந்த பெருநகர் போக்குவரத்து ஆணையத்தின் (CUMTA) முக்கிய நோக்கமாகும்.

**21. மோனோ இரயில் திட்டம்:**

தமிழக அரசு சென்னை மோனோ இரயில் திட்டத்தை **43.48** கி.மீ. தொலைவிற்கு கீழ்க்கண்ட இரு திட்டங்களாக செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திட்டம்–1 :**

**பூந்தமல்லி முதல் கத்திப்பாரா வரை இணைப்புடன் போரூரிலிருந்து வடபழனி வரை:**

இந்த வழித்தடத்தின் மொத்த தூரம் **20.68** கி.மீ ஆகும். இத்திட்டம், பொது மற்றும் தனியார் பங்களிப்புடன், ரூ.**3,267** கோடி திட்ட மதிப்பில், வடிவமைத்து, நிதி திரட்டி, கட்டமைத்து, பராமரித்து, ஒப்படைக்கும் (Design, Build, Finance, Operate and Transfer)அடிப்படையில் செயல்படுத்தப்பட உள்ளது. திட்ட செயல்படுத்துனர் ஒப்பந்தப்புள்ளி (RFQ) வெளியிடப்பட்டு, இறுதி செய்யப்பட்டுள்ளது. இரண்டு நிறுவனங்கள் தேர்வு

செய்யப்பட்டு அவர்களிடம் திட்டக் கோரிக்கை (RFP) சமர்ப்பிக்க கோரப்பட்டுள்ளது.

மத்திய அரசின் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம் தனது 11.11.2014-ஆம் நாளிட்ட கடிதத்தில் திட்டம்–1–க்கு கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

**திட்டம்–2 :**

**வண்டலூர் முதல் வேளச்சேரி வரை:**

இந்த வழித்தடத்தின் மொத்த தூரம் **22.80** கி.மீ ஆகும். இத்திட்டத்தை ரூ.**3135.63** கோடி திட்ட மதிப்பில், பன்னாட்டு நிதி உதவியுடன் செயல்படுத்த கருத்துருக்கள் மத்திய அரசின் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்திற்கு **11.12.2014** அன்று அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

## 22. துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு:

போக்குவரத்துத் துறையானது, தென்னக இரயில்வே துறை, சிவில் விமான போக்குவரத்துத்துறை, தபால் துறை மற்றும் தொலைத் தொடர்புத்துறை ஆகிய மத்திய அரசுத்துறைகளின் போக்குவரத்து தொடர்பான மேம்பாட்டுத் திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தும் ஒருங்கிணைப்புத் துறையாக விளங்குகிறது. மேற்கண்ட துறைகளிடமிருந்து

பெறப்படுகின்ற நிலத்தேவை தொடர்பான கருத்துருக்கள் மீது மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் பரிந்துரையின் பேரில் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு உரிய துறைகளிடம் அவைகளின் திட்டங்களைத் தொடங்குவதற்கு ஒப்படைக்கப்படுகின்றன.

**23. விமான நிலையங்களை நவீனமயமாக்குதல் மற்றும் விரிவாக்கம் செய்தல்:**

பெருநகர் அல்லாத விமான நிலையங்களான (Non-Metro Airports) மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், தூத்துக்குடி மற்றும் சேலம் விமான நிலையங்களின் விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கல் திட்டத்திற்குத் தேவைப்படும் நிலங்களை கையகப்படுத்துவது தொடர்பாக இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திடமிருந்து பெறப்படும் கோரிக்கைகளின் மீது அரசால் விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**24. முடிவுரை:**

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் வெளியிட்டுள்ள **"தொலைநோக்கு திட்டம் 2023"** சர்வதேச தரத்திற்கு இணையான போக்குவரத்து மற்றும் இணைப்பிற்கு,

இந்தியாவிலேயே சிறந்த கட்டமைப்பு வசதியினை உருவாக்க வழிகாட்டுகிறது.

வசதியான, அணுகத்தக்க மற்றும் எளிதில் கிடைக்கக்கூடிய போக்குவரத்து சேவையை அளிப்பதற்கு புதிய பேருந்துகள், புதிய வழித்தடங்கள், புதிய பேருந்து சேவைகள் ஆகியவை படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. டீசல் விலை உயர்வால் ஏற்படும் கூடுதல் நிதிச்சுமையையும், பயணிகளின் மீது சுமத்தாமல் இவ்வரசே ஏற்றுக் கொண்டுள்ளது.

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் எழுச்சியூட்டும் வழிகாட்டுதலின்படி தரமான போக்குவரத்து வசதியினை ஏற்படுத்த தொடர் மற்றும் உறுதியான நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டு வருகிறது. இதனால் மாநிலத்தில் உள்ள அனைத்து மக்களின் வாழ்க்கைத்தரம் முன்னேற்றம் அடைந்துள்ளது.

**பி. தங்கமணி**
**தொழில் (ம) போக்குவரத்துத்துறை அமைச்சர்**

## இணைப்பு

## மானியக் கோரிக்கை எண். 48

## போக்குவரத்துத் துறை

## வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2015–2016

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | துறை தலைமையகம் | வருவாய் | மூல தனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | தலைமைச் செயலகம் | 1,010,47,81 | 350,00,05 | 125,00,02 | 1,485,47,88 |
| 2 | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை | 54,64,76 | 1 | - | 54,64,77 |
| | **மொத்தம்** | **1,065,12,57** | **350,00,06** | **125,00,02** | **1,540,12,65** |